விலை
ரூ. 1

புதுத்தமிழ்க் கவிமலர்கள்

திருலோக சீதாராம்
· தொகுப்பாசிரியர் ·

ஹிமாலயா
பப்ளிகேஷன்ஸ்
வெளியீடு ·

புதுத் தமிழ்க் கவிமலர்கள்

தொகுத்தவர் :

ஸ்ரீ திருலோக சீதாராம்

பதிப்பித்தோர் :

ஹிமாலயப் பிரசுரங்கள்

59/1, வாலாஜா ரோட் :: சென்னை–2

1957

முதற்பதிப்பு 5000 பிரதிகள்
மே 1957 ;

தென்மொழிப் புத்தக ஸ்தாபன
ஆதரவுபெற்ற வெளியீடு

கலாமோஹினி பிரஸ், 59-1, வாலாஜா ரோட், சென்னை-2

பொருளடக்கம்

என்		பக்கம்
1.	கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை — எனது சுக துக்கங்கள்	1
2.	பாரதிதாசன் — தமிழ்ப்பேறு	4
3.	நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை — கத்தியின்றி ரத்தமின்றி ...	6
4.	ச. து. சுப்ரமண்ய யோகி — திக்குகள் எட்டும்...	8
5.	சுத்தானந்தபாரதி — யசோதரையும் சித்தார்த் தனும் ...	10
6.	டி. கே. சி. — குற்றாலத்து அண்ணல் ...	13
7.	ராய. சொக்கலிங்கம் — காந்தி-திருத்தசாங்கம்...	14
8.	நாணல் — பாம்பும் பிடாரனும் ...	17
9.	ஜோதி — கவிஞன் கர்வம்	19
10.	பிக்ஷு — மழைக்கூத்து	21
11.	சோமு — மனக் கன்னி	23
12.	பெ. தூரன் — கருக்கரிவாள்	26
13.	கம்பதாசன் — பிச்சைக்காரன் ...	28
14.	கொத்தமங்கலம் சுப்பு — புரியாதவன் பாட்டு...	30
15.	துறையவன் — வெறும் ஆசை ...	33
16.	சுரபி — வெள்ளி முளைக்குது ...	36
17.	ரா. அய்யாசாமி — ராதையின் வேதனை	38
18.	கலைவாணன் — மின்மினி	40
19.	புதுமைப் பித்தன் — கடவுளுக்குக் கண்ணுண்டு	42
20.	மாறன் — தாரகைப் பெண்கள்	44
21.	சிட்டி — அலைகடலில்	4S
22.	சாலிவாஹனன் — யோகம்	48
23.	சக்தி சரணன் — என்சொல்கோ ?	50
24.	தீபன் — சூரியோதயம்	52
25.	வி. துரைசாமி — நட்டகல்	54
26.	கோபிநாதன் — என்னே ?	56

எண்		பக்கம்
27.	அழ. வள்ளியப்பா — அம்மாவின் கவலை	58
28.	கல்கி — சொல்கிளியே	61
29.	குயிலன் — இருளும் ஒளியும்	63
30.	கண்ணதாசன் — பாடாய் தும்பீ	65
31.	நாவற்குழியூர் நடராசன் — சிலம்பொலி	67
32.	நெற்குப்பை ராமசுப்பிரமணியன் — அழகு	69
33.	தமிழழகன் — உதயம்	71
34.	என். எஸ். சிதம்பரம் — யாரறிவார் ?	73
35.	மு. அண்ணாமலை — பொலிகின்றுள்	75
36.	வாணிதாசன் — சேரி	77
37.	சாமி பழனியப்பன் — இப்புவியா காணும் ?	81
38.	முடியரசன் — குடும்பம் ஒரு காவியம்	83
39.	திருச்சிற்றம்பலக்கவிராயர் — இலட்சியம்	85
40.	அ. வெ. ர. கிருஷ்ணசாமி — குழந்தை — ஒரு கவிதை	88
41.	தொ. மு. பாஸ்கரத் தொண்டமான் — காதலின் பொருள்	90
42.	அ. முத்து சிவன் — காதல் தெய்வம்	92
43.	செந்தாமரை — டெலிபோன்	95
44.	திருலோக சீதாராம் — அதிசயம்	99
45.	புத்தனேரி ரா. சுப்ரமண்யன் — பூவே கொஞ்சம் பொறுத்திரு	101
46.	குஹன் — முதல்பிறை ...	103
47.	விபுலானந்த அடிகள் — ஈசன் உவக்கும் மலர்...	105
48.	வி. ஜி. ஸ்ரீநிவாசன் — சிவந்த தாமரை	107
49.	என். ராகவன் — எங்கள் மலை	108
50.	தே. ப. பெருமாள் — இசைக்குமரி	109
51.	பாசொலி — குழந்தை	112
52.	கோவை சி. ஏ. அய்யாமுத்து — தங்கை	114
53.	சங்கர் — தரிசனம்	117
54.	கே. வி. பாஷ்யம் — கவித்தேவன் வாழ்த்து	118
55.	சுரதா — தென்னுட்டின் சித்திரை	119

முகவுரை

தென் மொழிகள் புத்தக டிரஸ்டின் ஆதரவில் முதலில் வெளியாகும் நூல்கள் தென்னிந்திய மக்களுக்கு அளிக்கப் படுகின்றன. இந்த நிலயம் "போர்டு" நிலயத்தாரின் நன் கொடையால் உருவாகி வளர்ந்தது. இதன் நோக்கம் தென் னிந்திய மொழிகளாகிய தமிழ், தெலுங்கு, மலேயாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளிலும் அறிவும், கலேயும் நிறைந்த நூல்களேக் குறைந்த விலேக்கு வெளியிடுவதை ஆதரிப் பதேயாகும். இந்நோக்கத்தை நிறைவேற்ற "போர்டு" நிலயத் தாரும் தென்னிந்தியப் பல்கலேக் கழகத் துணேவேந்தர்கள் எழுவரும் சேர்ந்து சிந்தித்து, ஏராளமான, பல்வகையான சிறந்த நூல்களேக் குறைந்த விலேயில் விற்பனே செய்ய இந்த ஸ்தாபனத்தை நிறுவினர். இதற்கென நிறுவப்பட்ட மூன் ருண்டுத் திட்டத்தின் முதல் வெளியீடு இது. கடுநடையுடைய நூல்களே வெளியிட மேற்கொள்ளவில்லே. ஆங்கிலக் கல்வி இல்லாத படித்த பாமரனுக்கும் பயன்படுமாறு எளியநடையில் இன்பமும், பயனும் தரும் புத்தகங்களேத் தேர்ந்தெடுத்தலே இந்த ஸ்தாபனத்தின் லட்சியமாகும்.

இலக்கிய வளம் நிறைந்த மூல நூல்களேப் பதிப்பித்தல், கலே, விஞ்ஞானப் புத்தகங்களே வெளியிடல், உலகத்திலே யுள்ள மற்ற மொழி நூல்களே மொழிபெயர்த்தல் ஆகியவையே இந்த ஸ்தாபனம் செய்ய விரும்பும் பணிகளாகும்.

"மலிந்த விலேயில் உயர்ந்த நூல்" இதுவே தென்மொழிகள் புத்தக டிரஸ்டின் இலட்சியம். இந்த நோக்கம் எவ்வளவு தூரம் இம்முதல் வெளியீட்டால் நிறைவேறியிருக்கிறது என்ப தைப் பொதுமக்கள்தான் சொல்ல வேண்டும். இம்முயற்சியின் பயனும் வெற்றியும் பத்தாண்டுகளுக்குப் பிறகே வெளிப் படலாம். ஆனல் இத்திட்டம் உண்மையான கற்பனே நோக் குடையவர்களுக்குப் புலனுகும். இதனல் விளேயக்கூடியன எண்ணிறந்தன. மலிவான இப்புத்தகங்களேத் திறமையான

வகையில் தென்னிந்தியா முற்றிலும் பரப்பினால் இவை பட்டித் தொட்டிகளிலுள்ள மக்கள் கரங்களிலும் தவழும். அப்போது இந்நாட்டின் உயிர்நாடி போன்ற மக்களின் வாழ்வில் இன்ப ஒளி வீசும். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளுக்காகவே இந்நிலையம் ஏற்படுத்தப்பட்டதற்குத் தக்க காரணங்கள் உண்டு. ஏனெனில் இவை தென் நாட்டு மொழிகள். ''தக்கணம்'' என்பது பூகோள நூற்படி பழைய இந்தியாவிலே, விந்தியத்தின் தென் பாகமாகும். பண்பாட்டின் படி இந்நான்கு மொழிகளையோ, அவற்றின் கிளை மொழிகளையோ பேசும் மக்களைக் கொண்ட தேசத்தைக் குறிக்கும். இம்மொழிகள் நான்கும் ஓரினத்தன என்பதில் ஐயமில்லை. ''திராவிடம்'' என்ற அடைமொழியைச் சேர்க்கத் தயங்குகிறேன். ஏனெனில் அது 'மொழி', 'இனம்' என்ற பொருளில் கொள்ளப்படாமல், கருத்து வேற்றுமை, அரசியல் என்ற நோக்குடன் பயன்படுத்தப்படுகிறது. இம்மொழிகளிடையே காணப்படும் ஒருமைப்பாடு தவிர, இம்மொழி பேசும் மக்களிடையேயும் காணப்படும் கலாசாரம் இப்பகுதியை இந்தியாவின் ஏனைய பகுதியினின்றும் தனித்துக் காட்டுகிறது. சாதாரணமாக நாம் அறிந்துகொள்ளும் கர்நாடக சங்கீதமும் இதைத் தெளிவுப்படுத்தும். அவ்வாறே இப்பகுதிகளில் உள்ள சிற்பக்கலையும், கட்டிடக் கலையும் தனிப் பெருமையுடையன. மக்களின் பழக்க வழக்கங்கள், சடங்குகள், விழாக்கள் முதலியவற்றிலும் குறிப்பிடத்தக்க ஒருமைப் பாட்டைக் காண்கிறோம். இத்தனிச் சிறப்புகள் இந்நூலகத்தாரின் வெளியீடுகளால் பிரதிபலிக்கும் என நம்புகிறேன். அத்துடன் இந்தியப் பண்பாட்டை விளக்கும் நூல்களையும் பிறநாட்டு மொழிகளில் உள்ள நூல்களின் மொழிபெயர்ப்புகளையும் வெளியிடுவதன் மூலமாக, குறுகிய வேறுபட்ட மனப்பான்மை தவிர்க்கப்படும்.

பி. வி. இராஜமன்னார்

★

முன்னுரை

உள்ளத்து உள்ளது கவிதை—இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்—உண்மை
தெரிந்துரைப்பது கவிதை (கவிமணி)

உள்ளத்து உள்ளது கவிதை. கண்ணுக்கும் காதுக்கும் மற்றப் பொறி புலன் நுகர்ச்சிகளுக்கும் காரணமாகக்கிடப்பது இந்தப் பெரும் படைப்பு. இதை இயக்கியும், இயங்கியும் இருக்கும் தத்துவங்கள் உள்ளத்தில் எழுப்புகின்ற உணர்ச்சியே கவிதைக்கு மூலம்.

கவிதைக்குப் பிறப்பிடம் கவி இதயம். கவி இதயத்தின் வெளியீடு கவிதை. மொழி, கவிதை பவனிவருகின்ற பல்லக்கு.

பாட்டினைப் போல் ஆச்சர்யம்
பாரின்மிசை இல்லையடா!

என்கிறார் பாரதி. இதுதான் கவிதை என்று வார்த்தைகளால் வகுத்துரைக்க ஒண்ணாத ஒருபேரனுபவம் கவிதை.

கவிதை என்றால் என்ன என்ற வினாவிற்கு அறுதியிட்டுக் கூறும் விடை இல்லை. எனினும் 'இதோ கவிதை' என்று இனங்காண முடியும். 'இவன் கவிஞன்' என்று கண்டு கொள்ள இயலும்.

கள்ளையும் தீயையும் சேர்த்து—நல்ல
காற்றையும் வான வெளியையும் சேர்த்து

தமிழ்ப் புலவர் தீஞ்சுவைக் காவியங்கள் செய்து கொடுத்திருக்கின்றனர் என்று கவிதையின் தன்மையை ஒருவாறு பாரதி விளக்குகிறார். இனிமை, உணர்ச்சி, இசை, தெளிவு இத்தனையும் கலந்த ஒரு கலவை கவிதை என்பது கருத்து.

மலையும் மடுவும், வானும் கடலும், மானும் புலியும் என்று இப்படித் தோற்றும் படைப்பு; இன்பம் துன்பம், வெற்றி

தோல்வி, பிறப்பு, இறப்பு இப்படியாக இயல்கின்ற வாழ்க்கை - ஒன்றைப் பின்னிக் கிடக்கின்ற முரண்தொடை போன்று தோற்றுகின்றன. சாதாரண மனிதர் கண்களுக்குப் பொருள் விளங்காத புதிர் இது.

கவி உள்ளத்தில் இந்த வேறுபாடுகளைக் கடந்து நிற்கின்ற ஒருமை, முரண்பாடுகளை வென்ற அழகு புலனாகிறது. அந்த அமைதியை, அழகை, அதன் அர்த்தத்தை, அதை உணர்ந்து கொண்டதனால் விளைந்த இன்பத்தை வாய்விட்டுக் கூறவேண்டு மென்ற எழுச்சியில் கவிஞன் பாடுகிறான்.

கவிதைப்படைப்புக்கு நிலைக்களன் கவி இதயம். கவிதா ரசனைக்கு நிலைக்களன் கவிதையை நாடி அனுபவிக்கிற வனுடைய இதயம். கவிஞன் தனது உணர்ச்சிக்கு உயிரும் ஒளி யும் கொடுக்கிறான். ரசிகன் அதை ஏற்றுப் போற்றி மகிழ்ச்சி யடைகிறான். இந்தத் தொடர்புக்குத் துணைபுரிவது மொழி. அன்றாடம், நமமைச் சுற்றியுள்ள உலகும், நமது உள்ளமும் இயங்கும்போது, அவ்வியக்கங்கள் உணர்ச்சிகளாக உள்ளத் தில் மின்வெட்டுகின்றன. இந்த உணர்ச்சிக் கீற்றுகளை அற் புதக் கவியுருவங்களாக்கிப் பண்டையத் தமிழ் வாழ்வையே, அகம், புறமென்று வகைப்படுத்தி விமர்சனம் செய்திருக்கிறார் கள் பழம் புலவர்கள். ரஸப் பெருக்குடைய கவிதை மணிகளை ஆங்காங்குப் பதித்து ஒரு முழு வாழ்வைச் சித்திரிக்கும் கதை உருவமே காப்பியம்.

வசனத்தில் சிறுகதைகளுக்கு வரவேற்பு மிகுந்திருக்கும் இந்த நாளில் செய்யுள் நடையிற் சிறு கவிதைக்கே இடம் கிடைப்பது இயல்பு. காரணம் இவ்வகைப் படைப்புக்குக் கணநேரத்து ரஸப் பெருக்கு ஒன்று போதும். காவியப் படைப்பு ஒரு கவிஞனுடைய முழுவாழ்வையோ அல்லது வாழ் வின் பெரும்பகுதி நேரத்தையோ கவர்ந்து கொள்ளக்கூடும். நாள், வாரம், திங்கள் என்று கால அளவைகளுக்குட்பட்டு நூல்களும் ஏடுகளும் அச்சாகி வருகின்ற பரபரப்பும் இட நெருக்கடியும் சிறு கவிதைகளுக்கே வாய்ப்புத் தருகின்றன. மேலும், நின்று பயிலுதற்கு நேரமின்றி விரைந்து செல்லும்

கல்விமுறையில் பழைய காப்பியங்களையே சிற்சில பகுதிகள் பார்த்தால் போதுமென்ற நிலைதானே இன்று இருந்துவருகிறது; இந்தச்சூழலில் பெருங் காப்பியங்கள் தோன்றாதது வியப்பில்லை.

இலக்கியப் படைப்புக்கு, காலப் போக்கும் சூழ்நிலையும் கூடக் காரணமாகின்றன. சமுதாயம், சமயம், அரசியல், பொருளாதாரம், காதல் போன்ற எல்லாத் துறைகளிலும் மாறுதல் ஏற்பட்டுவிட்டது. கால மாறுதல்களை ஒட்டிப் புதுப்புது மனோபாவங்களை இலக்கியம் பிரதிபலிக்கும்போது அது கவிதையிலும் தெளிவாகத் தெரியத்தானே செய்யும்.

அரசு என்பது இப்பொழுது மன்னனுடைய மாட்சிமையை அடிப்படையாகக் கொண்டிராமல், மக்களின் வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. இந்த நாளில் பரணி, உலா போன்ற பிரபந்தவகை பயன்படாது. பண்டைய அகத்துறை இலக்கியங்கள், பேசுகின்ற திணை ஒழுக்கங்கள், வாழ்க்கை அமைப்பே மாறிப்போயிருக்கும் இந்தக் காலத்துக்குப் பொருந்தா.

எனவே, புதுமுறைகள், துறைகள் காணவேண்டிய நிலை நமக்கு ஏற்பட்டுவிட்டது. புதுயுக மனிதர்க்கு இன்பமும் உணர்ச்சியும் ஊக்கமும் தரவல்ல முறையில் தமிழை எளிமையும் இனிமையும் உயிர்ப்பும் உடையதாகச் செய்துகொண்ட பாரதியே இந்த யுகத்தின் தலைவராக விளங்குகிறார். எனவே இது பாரதி யுகம்.

தமிழ்க் கவிதையின் வயது தமிழின் வயதுதான். தொன்மையான தமிழ்மொழியில் கவிதைச் செல்வம் மிகுதியாக இருப்பது இயல்பு. காலத்தால் மூத்து நிற்கும் மொழி, மனிதசிந்தனையின் பிள்ளைப் பிராயம் தொடங்கி வளர்ந்து வந்துள்ள இன்பப் பெருக்கு அனைத்தையும் தன்னகத்தே அடக்கியிருக்கிறது என்ற கருத்தில் உண்மை இருக்கிறது.

ஆங்கில இலக்கியத் தொடர்பால் 'லிரிக்' என்ற புதுவகைக் கவிதைகள் தமிழ்ச் சோலையில் பூத்திருக்கின்றன. இதுபோன்ற கவி உருவம் தமிழுக்கு முற்றிலும் புதிதன்று.

ஒரே செய்யுளில் ஒரே பயனிலே வெளிப்படக் காண்பது முத்தகம். தொடர்ந்து வருகின்ற சில, பல செய்யுட்களும் சேர்ந்து ஒரே பயனிலேயைக் கொண்டு அமைவது குளகம். 'லிரிக்' பாடல்கள் இந்த இனம்தான். இத்துறையிலும் பாரதியே நமது முன்னேடி.

பாரதிக்குப் பின்னர் கவிதை முயற்சிகள் பெருகி வளர்ந் திருக்கின்றன. இவை கவிதையின் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை ஊட்டுவன. பாரதிக்குப் பின் வந்த கவிஞர்களின் சாதனைகளில் சிலவற்றைத் தொகுக்கும் முதல் முயற்சி இது.

கவிதை எழுதுகின்ற எல்லோருடைய கவிதைகளேயுமோ, ஒவ்வொருவரும் இயற்றியுள்ள சிறந்த கவிதைகள் அனைத்தை யுமோ, தொகுக்கும் முயற்சி அல்ல இது. கவிதைத் துறையில சமீபகாலமாக நடைபெற்றிருக்கும் சாதனைகளை ஓரளவேனும் தமிழ் மக்கள் அறிந்துகொள்ளச் செய்யும் முதல் தொகுப்பு இது. இதில் சேர்க்கப்படாமல் பாடல்கள் விடப்பட்டிருந் தால், அப்படி விடப்பட்ட பாடல்களின் தரம் குறைந்ததென்ற கருத்தில் அவை விலக்கப்படவில்லை என்பதை இங்கே குறிப் பிட விரும்புகிறேன். மலிவான விலேயில் யாரும் எளிதில் வாங் கிப் படிக்குமாறு கையடக்கமான சிறு கவிதைத் திரட்டு ஒன் றைத் தயாரிப்பதில் உள்ள தவிர்க்க முடியாத இட நெருக் கடியே காரணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தொகுப்பு மக்களின் ஆதரவைப் பெறும் என்றும், விரிந்த அளவில் பெரிய தொகுப்புகளுக்குப் பின்னர் வாய்ப் புண்டு என்றும் எண்ணி அமைகிறேன்.

திருலோக சீதாராம்

★

புதுத் தமிழ் கவி மலர்கள்

★

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

பாரதியின் சமகாலத்தவரான கவிமணி கருணை ரஸம் மிகுந்த கவிஞர். 78 ஆண்டுகள் வாழ்ந்த கவிமணி 1954, செப்டம்பர் 26-ல் மறைந்தார். நாஞ்சில் நாட்டுத் தேரூர் இவரது பிறப்பிடம், ஆங்கிலக் கல்வி பெற்றவர்; ஆசிரியப் பணி புரிந்தவர். சாசன ஆராய்ச்சி புரிந்திருக்கிறார். 'மலரும் மாலையும்' என்பது இவர்களது கவிதைத் தொகுப்பு, 'ஆசிய ஜோதி', 'உமர்கய்யாம் பாடல்கள்' ஆகியவை மொழி பெயர்ப்பு நூல்கள். 'மருமக்கள் வழிமான்மியம்' ஒரு நகைச்சுவைக் காப்பியம். இயற்கை எழிலும், இயற்கையின் புதிரும் கவி இதயத்தில் எழுப்புகின்ற உணர்ச்சிகளை "எனது சுகதுக்கங்கள்" என்ற இந்தப் பாடல் சித்தரிக்கிறது.

எனது சுகதுக்கங்கள்

1

வானவெளிதனிலே—கவிந்தெழு
மாலைப் பொழுதினிலே
கூனப் பிறைவரவே—சிவன் திருக்
கோலம் தெளிவேனடி ;

முற்றிய ஆழியிலே—அலைவந்து
மோதி எறிகையிலே,
கற்றைக் கதிரெழவே—உமைதிருக்
காட்சி வியப்பேனடி :

தாமரைப் பொய்கையிலே—கதிர்ஒளி
தட்டும்அவ் வேளையிலே
பூமலர்ந்து ஓங்கிடவே—அரியென்று
போதம் நயப்பேனடி ;

மாமலைச் சாரலிலே—மதம்மிகு
வாரணக் கூட்டத்திலே
காமலர் சிந்திடவே—கணேசர்என்
கண்முன்னே நிற்பாரடி ;

மேட்டு நிலங்களிலே—தினைக்கதிர்
விம்மி விளைகையிலே
காட்டு மயில்வரவே—குகனும் என்
காதல் விளைப்பார் அடி ;

2

கா உயர் சோலையிலே - பசுவொடு
கன்று களிக்கையிலே
தாவிப் புலி வரவே—வரும்துயர்
தாங்க முடியவில்லை.

புல்வளர் கானத்திலே—கலைஇனம்
பொங்கிக் குதிக்கையிலே
கொல் கடு வாய்வரவே—நெஞ்சத்தில்
கூர் அம்பு பாய்ந்த தடீ;

குஞ்சரக் கூட்டத்திலே—ஒன்றை ஒன்று
குத்திப் பொருகையிலே
வெஞ்சின மாவரவே—அதில்உளம்
வெம்பி அழிந்ததடி;

வானுயர் காவினிலே—மதுவினை
வண்டுகள் சேர்க்கையிலே
கானவர் வந்திடவே—உதிரம் என்
கண்கள் சொரிந்ததடி;

தேரைகள் ஓடையிலே—இனத்தொடு
சேர்ந்து மிதக்கையிலே
நாரைகள் வந்திடவே--பாவிமனம்
நைந்து குழைந்ததடி;

☆

புரட்சிக்கவி பாரதி தாசன்

பாரதியாருடன் புதுவையில் உடன் இருந்த நண்பர்களில் ஒருவரான கவிஞரின் இயற்பெயர் கனக சுப்புரத்தினம். புதுவைக் கல்லூரி ஒன்றில் தமிழ் ஆசிரியராகப் பணி புரிந்து ஒய்வு பெற்று, புதுவையிலேயே இருந்து வருபவர். தமிழ்ப் புலமை பெற்றுப் பாக்கள் இயற்றி வந்த இவர், பாரதியாரின் தொடர்பால் எளிய நடையிலும் சந்தங்களிலும் கவிதைகள் எழுதத் தலைப்பட்டார். பாரதியாரே நேரில் இருந்து கட்டளையிட இவர் இயற்றிய முதற்பாடல் 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்பது. சமூக சீர்திருத்தக் கொள்கைகளைத் தீவிரமாக மேற்கொண்ட கவிஞர் பல காப்பியங்களையும் தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். சமூக உயர்வின்பால் கவிஞர் கொண்டுள்ள வேகம் இந்தப்பாடல்.

தமிழ்ப் பேறு

ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
என்னை எழுதென்று சொன்னது வான் :
ஓடையும் தாமரைப் பூக்களும் தங்களின்
ஓவியம் தீட்டுக என்றுரைக்கும் :
காடும் கழனியும் கார்முகிலும் வந்து
கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும் :
ஆடும் மயில்நிகர் பெண்களெல்லாம் உயர்
அன்பினைச் சித்திரம் செய்க என்றார்

சோலைக் குளிர்தரு தென்றல்வரும் பசும்
தோகை மயில்வரும் அன்னம் வரும்
மாலைப் பொழுதினில் மேற்றிசையில் விழும்
மாணிக்கப் பரிதி காட்சிதரும்
வேலைச் சுமந்திடும் வீரரின்தோள் உயர்
வெற்பென்று சொல்லி வரைக எனும்
கோலங்கள் யாவும் மலைமலையாய் வந்து
கூவின என்னை : இவற்றிடையே

இன்னலிலே தமிழ் நாட்டினிலே உள்ள
என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்
அன்னதோர் காட்சி இரக்கம் உண்டாக்கியென்
ஆவியில் வந்து கலந்ததுவே :
இன்பத் தமிழ்க்கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால்—
துன்பங்கள் நீங்கும், சுகம்வரும் நெஞ்சினில்
தூய்மை உண்டாகிடும் வீரம்வரும் :

★

நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

நாட்டு விடுதலைக்குப் பின்னர் சென்னை அரசாங்கக் கவிஞராகக் கொண்டாடப் பெறும் மேன்மை பெற்ற கவிஞர். காந்நீய இயக்கத்தில் ஈடுபட்டவர். விடுதலைப்போரின்போது இவர்கள் இயற்றிய 'கத்தி இன்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்ற பாடல் மக்களின் தேசீய உணர்ச்சியைச் சுடர்விடச் செய்தது. 'அவனும் அவளும்' என்ற காப்பியமும் 'என் கதை' என்ற வசன நூலும் குறிப்பிடத் தக்கவை. 'மலைக்கள்ளன்' இவர்கள் இயற்றிய நவீனம். புகழ்பெற்ற அந்தப்பாடலையே இங்கு தருகிறோம். காந்நீய வழி அறப்போரின் எழுச்சிப் பாடல், வீரர்களின் புடைபெயர்ச்சிக்கு ஏற்ற சந்தத்தில் அமைந்திருக்கிறது.

கத்தியின்றி ரத்தமின்றி

கத்தி இன்றி ரத்தம் இன்றி
யுத்தம் ஒன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர் (கத்)

ஒண்டி அண்டி குண்டுவிட்டு
உயிர் பறித்தல் இன்றியே
மண்டலத்தில் கண்டிலாத
சண்டை ஒன்று புதுமையே (கத்)

குதிரை இல்லை யானை இல்லை
கொல்லும் ஆசை இல்லையே
எதிரி என்று யாரும் இல்லை
ஏற்றும் ஆசை இல்லையே (கத்)

கோப மில்லை தாபமில்லை
சாபங் கூறல் இல்லையே
பாபமான செய்கை ஒன்றும்
பண்ணும் ஆசை இன்றியே (கத்)

கண்டதில்லை கேட்டதில்லை
சண்டை இந்த மாதிரி
பண்டை செய்த புண்ணியம்
பலித்ததே நாம் பார்த்திட (கத்)

காந்தி என்ற சாந்த மூர்த்தி
தேர்ந்து காட்டும் செந்நெறி
மாந்தருக்குள் தீமை குன்ற
வாய்ந்த தெய்வ மார்க்கமே (கத்)

★

பாலபாரதி ச. து. சு. யோகி

'தமிழ்க்குமரி' பாடல் தொகுப்பின் மூலம் நன்கு அறிமுகமாகியுள்ள கவிஞரின் அச்சேறாத கவிதைகளே அதிகம். சந்த விருத்தங்களை இயற்றுவதில் கம்பருடைய ஆதர்சம் இவருக்கு. ஆங்கிலத்திலும் பல கவிதைகள் இயற்றியுள்ளார். கம்பராமாயண விரிவுரைகள் ஆற்றுவதில் வல்லவர். உமர்கய்யாமின் பாடல்களை மொழி பெயர்த்துள்ளார். 'மக்தலேன மரியம்' இவரது படைப்பு. காளி உபாசகர். சரா சர தத்துவம் அனைத்திலும் அன்னை பராசக்தியே விளங்கக் காணும் கவிதைக் காட்சியே இந்தப்பாடல்.

திக்குகள் எட்டும்

1

திக்குகள் எட்டும் சிதறித் திடுக்கிடக்
கெக்கலி கொட்டிடுவாள்

பொக்கென ஓர்கணத்தே அண்டம் யாவையும்
பொட்டென வெட்டிடுவாள்
கக்கும் குருதிக் கடலினில் ஊழியின்
காற்றில் குதித்திடுவாள்
நக்கபிரானுக்கு நாயகி, பாவம்
நடுங்க நகைத்திடுவாள்.

2

அண்டங்கள் யாவும் குலுங்கிடக் கிண்கிணி
ஆட்டங்கள் காட்டிடுவாள்
கொண்டல் நடுவில் குளிர்ந்த மதிவைத்த
கோலம் விளக்கிடுவாள்
கண்டு மகிழ்ந்தவர்க்கு இன்ப வெறியில்
கவிதை பொழிந்திடுவாள்.
பெண்டுபிள்ளை குட்டி யாவரும் வாழ்ந்திடப்
பேரருள் செய்திடுவாள்.

3

சட்டச் சடசடக் கொட்டும் இடிக்குரல்
சத்தத்தில் வீற்றிருப்பாள்
வெட்டி அடித்திடும் மின்னல் வெறியினில்
மெட்டி மினுக்கிடுவாள்
துட்டர் பயப்படச் சிட்டர் களித்திடத்
தோத்திரம் பாடிடுவோம்
பட்டின் மெதுவுப் பதத்தினில் வீழ்ந்து
பரவசம் எய்திடுவோம்;

★

சுவாமி சுத்தானந்த பாரதி

அரவிந்த ஆசிரமத்தில் பல ஆண்டுகள் மோனம் காத்த அடிகள் இப்பொழுது வடலூரில் இருந்து கல்விப்பணி புரிந்து வருகிறார். யோக சாதனை செய்தவர். பன்மொழிப் புலவர். பன்மொழிக் கவிஞர். சமீபத்தில் ருஷ்ய யாத்திரை சென்று திரும்பினார். நூற்றுக்கணக்கான கவிதைக் கொத்துகளும், பல காப்பியங்களும், விமரிசனங்களும், வரலாறுகளும் செய்திருக்கிறார். 'பாரத சக்தி மகா காவியம்' மிகப்பெரிய அளவினது. 'ஏழை படும்பாடு', 'இளிச்சவாயன்' இவ்விரண்டு மொழிபெயர்ப்பு வசன நூல்களும் குறிப்பிடத்தக்கவை.

யசோதரையும், சித்தார்த்தனும்

(மான்டு) (திஸ்ரஏகம்)

சித்தார்த்தன் :

வாடி யுதிர்ந்த மலரைக் கண்டும்
வாழ்வை நம்பவோ—கண்ணே,

கோடி யுயிரைச்.சாவு நாளும்
கொண்டு போகுதே!

யசோதரை:

உதிர்ந்த பூக்கள் உரம தாகும்;
உதிக்கும் புதுமலர்—கண்ணு,
முதிர்ந்த கனிகள் விழ்ந்து விதைகள்
முளைப்ப தியற்கையே.

சித்தார்த்தன்:

எழுந்த பரிதி ஏறி வானில்
இரத்த வெள்ளமாய்—அங்கே
விழுந்து கங்குல் விரவக் கண்டும்
விதியை நம்பவோ—கண்ணே,
விதியை நம்பவோ?

யசோதரை:

இரவும் பகலும் சுழலும் பூவின்
இயற்கை யாவதே—கண்ணு,
வரவும் போக்கும் வரவும் உயிர்க்கு
வளமை யாவதே—வாழ்வின்
வழக்கமாவதே.

சித்தார்த்தன்:

வந்து செல்லும் மின்னல் போன்ற
வாழ்வை நம்பிடேன்—கண்ணே
இந்து போலத் தேயும் உலகின்
இன்பம் வேண்டிலேன்—அதன்
துன்பம் வேண்டிலேன்.

யசோதரை:

இன்ப மென்றால் இன்ப மாகும்;
இனிய வாழ்க்கையே—சதா
துன்ப மென்றால் துன்ப மாகும்
தொல்லு லகமே
கொஞ்சுங் கிளிகள், குதிக்கும்மயில்கள்
கூவுங் குயிலினம்

கஞ்ச மலரில் ஒதுங்கும் அன்னம்
களிப்பதைக் காணீர் — ஆற்றின்
கானத்தைக் கேளீர் !

சித்தார்த்தன் :

பாட்ட டங்கிப் புட்க ளெல்லாம்
படுத்து றங்கிடும் — ஆற்றின்
ஓட்டம் வாழ்வின் ஓட்டந் தன்னை
ஓங்கிப் பாடுதே — உள்ளம்
உண்மை தேடுதே......!

யசோதரை :

தென்றலும் நிலாவும் இந்தத்
தேன் பொழிலிலே — கண்ணு,
மன்றல் புரிந்து மகிழு மியற்கை
வளமை காணுமே.

சித்தார்த்தன் :

காற்றின் ஓட்டம், ஆற்றின் ஓட்டம்
கலந்தென் காதிலே — கண்ணே,
நேற்றிருந்த நில்லை இன்று......
நிசமி தென்னுமே.

யசோதரை :

அக்கக் காவென் றே கிளிகள்
அழைப்பதைக் கேளீர் !

சித்தார்த்தன் :

துக்கம் வந்தென் உள்ளந் தன்னைத்
துளைப்பதைக் காணாய் — உண்மை
அழைப்பதைக் கேளாய் !

★

ரசிகமணி டி. கே. சி.

தமிழ்க் கவிதையை இனங்கண்டு, அதன் இதயத்தையும் கண்டு ரசிக்கும் சக்தியைத் தமிழ் மக்களுக்கு வாரி வழங்கிய மேன்மையினால் 'ரசிகமணி' என்று அன்புடன் அழைக்கப் பெற்றவர். குற்றாலத்து அருவியில் குளித்துக் களித்துக் கவிதைக் காதலராக—கம்பன் அடியார்களாக மாறிய தமிழன்பரும் - தமிழரல்லாதாரும் அநேகர். மாற்றறிந்து கம்பன் கவிதையை இனங்காட்டித் தந்த ரசிகமணி தாமே ஒரு கவிஞர்தான் என்பதற்கு இந்தப் பாடல் சான்று. இந்த நாளில் கவிமணியின் பாடல்களில் இவர்கள் அதிகம் மகிழ்ந்திருந்தார்கள். கம்பர் தரும் காட்சி - முத்தொள்ளாயிரம் ஆகியவை இவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

குற்றாலத்து அண்ணல் :

கண் இமைக் காது காண்தகு வெற்பில்
காா்பல உறங்கு குற்றாலத்(து)

அண்ணலே எந்தன் குறைஎலாம் கூவி
அரற்றியும் நினதருள் காணேன்

விண்ணிடை நின்று விரைவொடுவந்து
வெண்ணகை யொடுவிளை யாடித்

திண்ணெனக் குதிக்கும் அருவியின் ஒலிதான்
திருச்செவி அடைத்தது கொல்லோ !

★

ராய. சொக்கலிங்கம்

தமிழ்ப் புலவரான இவர் பழந் தமிழ்ப் பத்திராதிபரில் ஒருவர். "ஊழியன்" என்ற இலக்கியப் பத்திரிகை "தேசியத் துறை"யிலும் சிறந்த பணிபுரிந்திருக்கிறது. காந்தியடிகளின் அறப்போரில் முன்னின்று தியாகங்கள் புரிந்தவர். காந்தியடிகளைப் போற்றிப் பிரபந்தங்கள் இயற்றியுள்ளார்.

அரசனுக்கு உரிய அங்கங்கள் பத்தையும், பாட்டுடைத் தலைவனுகக்கொண்ட காந்தியடிகளின் மீது ஏற்றி, காந்நீய மேன்மையை விளக்கும் திருத் தசாங்கம் இது.

காந்தி திருத் தசாங்கம்

பெயர் :

சிறையார் மணிக்கிள்ளாய் தேசம் செழிக்க
இறையான ஏதமிலான் பேர்என்—அரசாள்
முடிமன்னர் அஞ்சவரு மோகனதாஸ் காந்தி
அடிகள்அவன் பேர்என்று அறை !

நாடு :

பச்சைப் பசுங்கிளியே, பாரில்உயர் காந்திமகான்
மெச்சு புகழ் நாட்டை விளம்புவாய்—நச்சு
தனிஇமயம் தொட்டுத் தமிழ்க்குமரி ஈறும்
முனிவரர்நாடு என்றே மொழி!

ஊர் :

கொஞ்சுமொழி அஞ்சுகமே கோதறியா எம்காந்தி
விஞ்சும் அரும்பதிஎன் ? விள்ளுவாய்—அஞ்சுலகில்
யாதுமவன் தன்னூரே, யாவரும் அவர்க்கு உறவென்று
ஏதமொன்றும் இன்றி இயம்பு.

ஆறு :

வானூர் மரகதமே மாதவத்துப் புத்திரியாய்
ஆனுத செல்வன்உயர் ஆறுநவில்—தேன்நாறும்
கங்கை முதல்தென் கடல்வீழ் பொருநைவரை
இங்கிதப்பல் யாறென்று இசை!

மலை :

இன்மழலைச் சோலை எழிலார் இளம்தத்தாய்
சொன்னயத்தார்க்கு உற்றமலை சொல்லுவாய்— தன்நேர்
இரும்பொன் இமயம்முதல் எற்பொதிகை ஈறாக
பொருமலைகள் எண்ணிலவாம் பேசு.

ஊர்தி :

அஞ்சொல்இள மெல்லியலார் அங்கைவளர் அஞ்சுகமே
செஞ்சொலான் செல்ஊர்தி செப்புவாய்—விஞ்சுகலை
பூண்ட நலம்சார் புகழார் பெருங்குணத்தில்
மாண்டார் மனமென் றுரை

படை:

அமிழ்த மொழிபடிப்பான் ஆயிழையார் அங்கை
கமழு மரகதமே காந்தி—இமிழ்படைகொல்?
குன்றெழுந்து வந்திடினும் கூறுபடுக்கும் இசை
குன்றாத உண்மையெனக் கூறு.

முரசு:

சிறுகுதலைத் தத்தாய் திருவாளன் முன்றில்
மறுகுமணி மாமுரசம் யாதோ?—அறமே
இனிமை கருணை எளிமைபொறை வாய்மை
புனிதம்இவை என்றே புகல்.

மாலை:

செம்பவள வாய்க்கிள்ளாய் சீரார் சபர்மதியன்
வம்பவிழும் மாலை வழுத்துவாய்—எம்பெருமான்
வான்கீண் டுயர்ந்த வரைநேர் பெரும்புகழைத்
தான்கொண்டான் தார் என்றே சாற்று.

கொடி:

ஏரார் இளங்கிளியே எங்கள் உயிர்க்குயிரான்
காரேர் கொடிஎன் கழறுவாய் - பாரேத்தும்
மும்மை நிறத்து முதுநாட்டு அமைத்தஉயர்
செம்மைக் கொடியெனவே செப்பு.

✶

" நாணல்"

ஆங்கிலப் பேராசிரியரான அ. சீனிவாசராகவன், தமிழ்ப் புலமையும், புலமையும் நிறைந்தவர். தமிழ்க் கவிதைகள், நாடகங்கள், இலக்கிய விமர்சனங்கள் இயற்றியுள்ளார். தற்போது தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரித் தலைவர். 'சிந்தனை' என்ற இலக்கிய மாதப் பத்திரிகை ஒன்றைச் சிலகாலம் சென்னையில் நடத்தியிருக்கிறார். கம்பராமாயணச் செய்யுட்கள் சிலவற்றையும், சுப்பிரமணிய பாரதியார் பாடல் சிலவற்றையும் ஆங்கிலப் படுத்தியிருக்கிறார். சிறந்த ஒற்றையங்க நாடகங்கள் எழுதியிருக்கிறார். தலைசிறந்த பேச்சாளர்களில் ஒருவர். இந்தப் பாடல் - பிடாரனுடைய குழலிசையில்தான் எத்தனை ஏக்கங்கள் தொனிக்கின்றன :

பாம்பும் பிடாரனும்

பாம்புப் பிடாரன் ஊதிய குழலில்
பதைத்துத் துடிக்கும் குரலெதுவோ ?

சாம்பற்காடும் தாழைமடலும்
சண்பக மணமும் மறந்தி சையில்

கூம்பிய பேதமை கூட்டிய நெறியிற்
குறுகிக் குடத்தில் அடைந்து மனம்

தேம்பி மயங்கும் பாம்பின் குரலா ?
திகைத்திது காணும் என் குரலா ?

உண்பதுநாழி உடுப்பது கோவணம்
உறங்கி விழுவது பாழ் மனையில்

எண்ணி இதற்குப் பொருள்பெற வேண்டின்
எத்தனையோ தொழில் எங்கும் உள

பண்ணை இதற்குப் பாதகவலையாய்ப்
பின்னிப் பாம்பின் படநிழலை

நண்ணியே வாழும் பேதையின் குரலா ?
நலிவிதில் ஏங்கும் என் குரலா ?

காட்டிற் கண்ட சுதந்திர மதனில்
கட்டுப்பட்டிசை காணுவதே

மேட்டிமை என்று நிமிருது நாகம் ?
மின்னென மண்டலம் இடும் அரவின்

நாட்டியப் போதை நரம்பினில் ஏற
நளிர் இசை பெய்யும் பிடாரன் இதை

வாட்டமிலாப் பெருவாழ்வாக் கொளவோ ?
வண்ணக் குழல் தரு செய்தியிதோ ?

★

"ஜோதி"

'கலைமகள்' என்ற தமிழ் இலக்கிய மாதப் பத்திரிகையின் ஆசிரியர். இயற்பெயர் கி. வா. ஜகந்நாதன், மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையரின் மாணவர். பழந்தமிழ் இலக்கிய விளக்கவுரைக் கட்டுரை நூல்கள் பல இயற்றியுள்ளார். சிறந்த சிறுகதை ஆசிரியருள் ஒருவர். இவரது பற்பல தனிப்பாடல்களைத் தொகுத்து வெளிவந்திருக்கும் நூல் "மேக மண்டலம்". சிறந்த சொற்பொழிவாளர்களில் ஒருவர். காணும் உலகியல் அனைத்தையும் கவிஞன் தனது கற்பனை சக்தியினால் எழிலுறச் செய்துவிடும் ஏற்றம் படைத்தவன் என்ற கருத்தைப் பேசுகிறது இந்தப் பாடல்.

கவிஞன் கர்வம்

வாழ்க்கை நதிக்கரையில்—நிதம்
வந்திடு காட்சிகளில்
வீழ்ச்சியில் லாதபல - இன்ப
விளை வினைக் கண்டிடுவோம்

இன்ப நிகழ்ச்சிகளில் - நின்ற
இனிமை மணம் நுகர்வோம்
துன்பக் கனவினிலும் - ஒரு
சோதியைக் கண்டுவப்போம்

மலையை அளந்திடுவோம் - அதன்
மாட்சி தெரிந்துயர் வோம்
அலையைப் பிளந்திடுவோம் - கடல்
ஆழத்தைக் கண்டுரைப்போம்

கற்பனை யாம் பரிக்கே - ஒரு
கடிவாளம் என்பதிலை
வெற்பினில் ஏறிவரும் - அந்த
விண்ணினிலும் பறக்கும்

உள்ளத்தே ஒளித்த - இன்ப
உணர்ச்சியைக் காட்டிடுவோம்
பள்ளத்துள் ளேபுதைந்த - செல்வப்
பரப்பை எடுத்தளிப்போம்

காதல் அழகை எல்லாம் - உள்ளக்
காதுக்கு இனிதாகச்
சாதல்இல் லாதபடி - இசை
சாற்றிக் களித்திடுவோம்

வீர விளையாட்டை - மனம்
வீறுகொண்டே துடிக்கக்
காரத் தொடு குமுறும் - பல
கவியில் உரைத்திடுவோம்

குனிந்து குனிந்து மனம் - மிகக்
கோழையானோர் களையே
முனிந்து நிமிர்ந்தேற்க - எரி
மூட்டிக் கவி வளர்ப்போம்

★

"பிக்ஷு"

ஆங்கில இலக்கிய உணர்வு மீதூறத் தாய் மொழிப் பற்று மிகுந்து, புதிய வழிகள் காண முனைந்த "இரட்டையர்"கள் என்று கு. ப. ரா - ந. பிச்சமுர்த்தி இருவரையும் குறிப்பிடுவார்கள். பின்னவரின் புனை பெயரே "பிக்ஷு". யாப்பு இலக்கண விதிகளைக் கடந்து வசன வடிவிலும் கவிதைகள் இயற்றுவது இழுக்கன்று என்ற புதிய கோட்பாடு எல்லா மொழிகளிலும் பரவி வருகின்றது. தமிழில் இம்முறையை மேற் கொள்ள முயன்றவர்களில் இவர் குறிப்பிடத் தக்கவர். வசனநடையிலேயே கவிதை - காவியம் பல யாத்துள்ளார். யாப்பு அமைதியுடனும் பாப் புனைய வல்லவர். சிறந்த சிறுகதை ஆசிரியர்களில் ஒருவர். சிலகாலம் குடந்தையில் வழக்கறிஞராக இருந்த இவர், இப்போது அறநிலையப் பாதுகாப் புத் துறை அலுவலராக வேதாரண்யத்தில் பணி யாற்றி வருகிறார்.

மழைக் கூத்து

பார்த்திரோ அதிசயம் கேட்டீரோ அதிசயம்.
நேற்று நள்ளிரவினில் நடைபெற்ற நடிப்பினை...

மந்தை மந்தையாய் மேகங்கள் சரிய
மலைகள்போல் இலைகள்போல் மேகங்கள் விரிய
விந்தை நிமிஷத்தில் விரிந்த மேகங்கள் போய்
யானையாய் மசிதோய்ந்த குட்டையாய்க் கடைசியில்
ஊமை இருள் தேவின் சோகம் சொட்டிடுமோர்
சோனையாய்த் தாரையாய் அமைந்த மழைக்கூத்தை. .

காற்று முழங்கிட உயிரொலி மறைந்திட
பொங்கிப் பேசிடுமோர் சீற்றம் பிறந்திட
ஆற்றலா வேகத்தோ டரக்கிவெம் கைநீட்டி
வெகுநாளய் விளங்கிய அல்லியை வேரொடு ஆட்டி
தண்ணீரால் வெள்ளியில் மின்னல் செய் அதிசயம்
பார்த்திரோ நேற்று கேட்டீரோ......

யானை அடிகள் அதிர்ந்து நடந்திட
எட்டுத் திசைகளும் இடிந்து விழுந்திட
பானைக் கருப்பைப் பழிக்கும்பேய் வானக
மார்பினில் மின்னல் சரங்கள் ஒளிர்ந்திட
காற்றதன் கைகளைக் குறுக்கி வாதாடியும்
பேய்போல் மழையைப் படுத்திவைத்த பாட்டைக்
கேட்டீரோ நேற்று பார்த்திரோ......

★

" சோமு "

தமிழ், ஆங்கிலம், சம்ஸ்கிருதம், ஹிந்தி ஆகிய நான்கு மொழிகளிலும் புலமை பெற்ற மீ. ப. சோமசுந்தரம். இவரது 'இளவேனில்' கவிதைக் கொத்து சென்னை அரசாங்கப் பரிசு பெற்றது. தமிழில் புதிய கவிதை உருவங்களை சமைத்துள்ள இவரது கவிதை வழியைப் பலர் பின்பற்றுகின்றனர். அகில இந்திய ரேடியோ தமிழ் இலக்கிய ஆலோசகராக இருப்பவர். இவரது சிறுகதைகள் கவித்துவ அனலுடன் வாய்ப்பான உருவம் பெற்றுத் திகழ்வன. கல்லறை மோகினி, திருப்புகழ்ச்சாமியார், உதய குமாரி, கேளாதகானம் ஆகியவை சிறுகதைத் தொகுதிகள். கல்கி ஆசிரியராக இருந்த காலே இவர் எழுதிய "கடல் கண்ட கனவு" அபூர்வமான சரித்திர நாவல். "ரவிசந்திரிகா" நவரசமும் கலந்த சமூக நவீனம். " மனமெனும் கன்னி " உள்ளச் சிறையில் ஊழிக்காலம் நின்று தவம் செய்யும் அழகைச் சித்தரிக்கும் கவிதை இது.

மனக்கன்னி

உள்ளச் சிறையில் ஒருகன்னி - அவள்
ஊழிக் காலம் தவமிருந்தாள்
உள்ளச் சிறையில் ஒரு கன்னி

கள்ள மனத்தின் கோடியிலே - இரு
கண்கள் மயங்கும் எல்லையிலே
உள்ளச் சிறையில் நின்றுநின்று - அவள்
ஊழிக் காலம் தவமிருந்தாள்
-உள்ளச் சிறையில் ஒருகன்னி.

வெள்ளம் வீசும் அலைகளிலே - மன
வேகம் சுழலும் புயல்களிலே
பள்ளம் வளையும் சுழிகளிலே - மனப்
படகில் மிதந்து தவமிருந்தாள்
உள்ளச் சிறையில் ஒரு கன்னி.

துன்பப் புகையின் முகில்வந்தே - உள்ளத்
துயரின் மீது படர்க்கையிலே
இன்ப மின்னல் வீசியவள் - அதில்
இயங்கி நடனம் ஆடிடுவாள்
—உள்ளச் சிறையில் ஒரு கன்னி.

இடிகள் அதிரும் இதயத்தில் - அவள்
இனிய மழையென இறங்கிடுவாள்
படிகள் பதியா மனக் குன்றில் - நொடி
பாய்ந்து சென்று விண்தொடுவாள்
--உள்ளச் சிறையில் ஒருகன்னி.

ஏக்கம் மண்டும் இருளினிலே - அவள்
எழில்செய் நிலவின் ஒளிதருவாள்
தூக்கம் அறியா விழிப்புடனே - அன்பு
துடிக்கும் உடலிற் காவல் செய்வாள்
—உள்ளச் சிறையில் ஒரு கன்னி.

காலம் அறியாப் பருவத்தாள்
என்றும் கற்பனை மிதந்த புருவத்தாள்.
நீலம் குலவிய உருவத்தாள் - மாந்தர்
நெஞ்சக் கடலில் நீந்திடுவாள்
—உள்ளச் சிறையில் ஒரு கன்னி.

★

பெ. தூரன்

ம. ப. பெரியசாமித் தூரன் தமிழ்க் கலைக் களஞ்சியத் தலைமை ஆசிரியர். தமிழ் வளர்ச்சிக் கழகச் செயலாளர். ஆண்டுதோறும் வெளியாகும் பல்துறை நூல்களில் சிறந்தவற்றிற்குப் பரிசும் பாராட்டும் தருகின்ற நிறுவனம் தமிழ் வளர்ச்சிக் கழகம். கல்வித் துறையில் ஆசிரியராக இருந்து புகழ் பெற்றவர். சிறுகதை, கவிதை, ஆராய்ச்சி, மனத் தத்துவம் ஆகிய துறைகளில் பல நூல்கள் இயற்றியுள்ளார். பாரதியாரின் எழுத்துக்கள் பலவற்றைத் தேடித் தொகுத்து இவர் பதிப்பித்துள்ள "பாரதி தமிழ்" என்னும் நூல் அரியசாதனை.

கிராம வாழ்க்கையின் காதல் காட்சி ஒன்றை நயம்பட விளக்கும் பாடல் இது.

கருக்கரிவாள்

கருக் கரிவாள் கைக்கொண்டே
கழனிசெலும் இளநங்காய்
அறுத்துவிட்டாய் என்உளத்தை
அஞ்சனக் கண் வாளாலே

கபடமிலா நேர் நோக்கால்
கனல் பாய்ச்சும் பெண்மானே
உபமானம் ஒன்றில்லா
உயர்வதனப் பைங்கிளியே

பூச்சூடிய கொண்டை
புலன்ஐந்தும் தான்மயக்கப்
பாச்சான் கொடிஇலேபோல்
பசுமைகொண்ட சிற்றுடை

கற்றைக் கொசுவமது
கலேந்தே சரிந்தாட
ஒற்றைவடச் செம்பவளம்
உவந்தேறி ஆடிவரும்.

அங்கிதனைக் கண்டறியா
அங்கலசம் சிறிதசையப்
பொங்கிவரும் இயல் அழகுப்
புன்னகையாய் போகின்றாய்

எட்டிக் களைபறிக்கும்
இடமெல்லாம் நிற்கேனே
கட்டி மண்ணை நீஉடைக்கக்
கைத் தடியாய் ஆகேனே?

ஏறுகின்ற வெயில் தணிக்க
இன்னிழலாய்த் தழுவேனே
மீறுகின்ற காதலுடன்
மெல்லமொழி பேசாயோ?

★

"கம்பதாசன்"

ராஜப்பா என்ற இயற்பெயருடைய கவிஞர் "கம்பதாசன்" பாட்டாளி மக்களின் வாழ்வைப் பரிவுடன் கூர்ந்து காண்பவர். இயற்கையின் அசைவுகள் அனைத்திலும் உழைப்பு—உயிர் இயக்கம் இவற்றைக் காணும் இவர் அங்கெல்லாம், ஏழைகளின் - உழைப்பாளிகளின் - தாபத்திற்கே விடை தேடுகின்ற நோக்கம் உடையவர். இசைப் பாடல்கள் பலவும், தனிக் கவிதைகள் பலவும் இயற்றியுள்ளார். 'அருணோதயம்' இவரது கவிதைத் தொகுப்பு.

பிச்சைக்காரன்

மழை இளைப்பாறிடக் குட்டை உண்டு - கொடும்
மனதிளைப் பாறிட எண்ணம் உண்டு
அழல் இளைப் பாறிட நீரும்உண்டு - எங்கள்
ஆசை இளைப் பாற உண்டோ இடம்?

பாம்பிளைப் பாறிடப் புற்றுண்டு - பட்சி
பறந்திளைப் பாறிடக் கூடுமுண்டு
வேம்பிளைப் பாறிடக் காகமுண்டு - எங்கள்
வேட்கை இளைப்பாற உண்டோ இடம்?

நதி இளைப் பாறிட ஆழியுண்டு - கொடும்
நஞ்சிளைப் பாறிட மருந்துமுண்டு
கதிரிளைப்பாறிட இரவுமுண்டு - எங்கள்
கவலை இளைப்பாற உண்டோ இடம்?

கண்ணிளைப் பாறிடத் தூக்கமுண்டு - அற்பக்
கழுதை இளைப்பாறத் துறையுமுண்டு
பண் இளைப் பாறிடத் தாளமுண்டு - எங்கள்
பசி இளைப் பாறிட உண்டோ இடம்?

★

கொத்த மங்கலம் சுப்பு

நாட்டு மக்களின் உழைப்பு, உணர்ச்சி, ஆவல், ஒழுக்கம், ரசனை இவற்றைக் கூர்ந்து கவனித்து அவற்றை அவர்தம் பேச்சுத் தமிழி லேயே எளிய சந்தங்களில் பாடல்களாக அமைக்கும் வல்லமை கைவரப்பெற்ற கவிஞர் சுப்பு. திரைப்படக் கலையில் புகழ்பெற்ற டைரக்டர்களில் ஒருவர். "காந்தி மகான் கதை", "பாரதியார் சரித்திரம்" இவை நாடோடிப் பாடல் வடிவத்தில் இவர் இயற்றிய பெரும் நூல்கள். இசையுடன் இந்தக் கதைகளை இவர் கவிப் பொழிவு செய்யக் கேட்டு மகிழ்ந்தவர் அநேகர். இவரது தமிழ் பாமர மக்களின் நாவில் நின்று வாழும் தமிழ்;

புரியாதவன் பாட்டு

ஒண்ணும் புரியுதில்லே அம்மா - இந்த
ஒலகத்து நடவடிக்கை
ஒண்ணும் புரியு தில்லே அம்மா

பெரிய மனுசன் புளுகினுக்க
பேப்பரிலே போடுறான்
சின்னமனுசன் புளுகினுக்க
செயிலுக்குள்ளே போடுறான்

படிச்சவங்க களவடிச்சா
காதலென்கிறான்
பட்டிக்காட்டான் கிளைபுடிச்சா
பாவமென்கிறான்.

கன்னக் கோலு களவு செஞ்சா
வச்சு வாங்குறான்
கள்ளச் சந்தைக் காரங்கிட்ட
பிச்சை வாங்குறான்

குடிச்சுப் போட்டு கூத்தடிச்சா
குத்தமென்கிறான்
குழைச்சுப் போட்டுக் கூத்தடிச்சா
குஷிகள் என்கிறான்

தெரு முனையிலே சண்டை போட்டா
தெண்டிக்கிறாங்க
தேசங்கூடி சண்டை போட்டா
செயிச்சுக் கிறுங்க

நாலுபேரு சண்டை யிட்டா
கலக மென்கிறுன்
நாடு கூடி சண்டை யிட்டு
உலக மென்கிறுன்

செத்த மனிசன் பேரைச் சொல்லி
சிலையை நாட்டுறுன்
சீவனுள்ள மனுசனுக்கும்
அதையே நீட்டுறுன் (ஒண்ணும்)

தாய் :

சின்னஞ்சிறு வயசுதம்பி - இந்த
சேதி அறிந்து கொள்ள
இன்னும் வயசு வல்லே (சின்ன)

★

"துறைவன்"

எஸ். கந்தசாமி. திருச்சி வானொலி நிலைய நாடக அமைப்பாளராக இருப்பவர். ஆங்கிலம் தமிழ் இவற்றில் புலமை உடையவர். தீர்ந்த வடிவங்களில் அரிய கவிதைகள் இயற்றியுள்ளார். நாடகம், சிறுகதை, காப்பியம் இத்துறைகளில் நல்ல வெற்றி பெற்றிருப்பவர். மாணவராக இருந்த நாள்முதலே கவிதை இயற்றும் திறமை பெற்றவர். காந்தியடிகளைப் பற்றி இவரது நெடுங் காப்பியம் தொடர்ந்து ஒலிபரப்பப் பெற்றது.

வானில் தோன்றி ஒளிர்ந்து. பின்சென்று மறைந்து கொண்டிருக்கும் ஒளிக்கோளங்களுடன் ஒன்றுறப் பழகி விளையாடும் கவியுள்ளம், அந்தச் சுடர்களை 'நில்லுங்கள்' என்று கூறி நிறுத்த விரும்புகிற கற்பனை இந்தப் பாடல்.

வெறும் ஆசை

பொற் சுடரே நில்லுங்கள்
போகலாம் நில்லுங்கள் :

அங்கங்கே அங்கங்கே
ஆச்சரியக் குன்றுகளாய்த்
தங்கி விளையாடுகின்ற
தங்கஒளிச் செண்டுகளே :

சுடரோன் அழைத்தாலும்
சுற்றிஇருள் சூழ்ந்தாலும்
இடர்ஆழி மூழ்கிடவே
எழுந்தொருவர் போகாதிர்

அஞ்சிவிளையாட்டயர்ந்தால்
ஆனந்தம் பூரணமோ
கொஞ்சம் இருந்துவிட்டால்
குறையாசை பொங்கிவிடும்.

கதிரோன் குழந்தைகளே
கட்டற்ற கற்பனைகாள்
முதிரா அரும்பே எம்
முற்றம் விட்டுப் போகாதீர்.

செழித்த இலைகள் உண்டு
சிவப்புஏறும் தளிர் உண்டு
விழித் திருக்கும் தென்றல்உண்டு
விட்டு விட்டுச் செல்லாதீர்.

மண்ணில் விளையாட்டு
மாலையொடு நிற்பதில்லை
உண்ணத் தெவிட்டாதே
ஒளிந் திங்கே தங்கிடுவீர்.

சிந்தைக் குகைகளிலும்
சேணுயர்ந்த சோலைகளில்
அந்தப் புரங்களிலும்
ஆசனங்கள் போட்டமர்ந்து

எண்ணக் கனிதின்போம்
இசையின் தெளிவுண்போம்
மண்ணைக் குழைத்ததிலே
மாதுளம்பூக் கொய்திடுவோம்.

அருக்கன் மறைந்தால் என்
அந்தி இருள் சூழ்ந்தால் என்
இருக்க நினைந்து விட்டால்
எண்ணம்போல் ஆகிடலாம்

பொற்சுடரே நில்லுங்கள்
போகலாம் நில்லுங்கள்
நற்சுடரே என்னேடொரு
நாழிகையே வேண்டுகிறேன்.

★

"சுரபி"

பாரத அரசாங்கச் செய்தி ஸ்தாபனத்தில் தமிழ்த் துறை அலுவலராக இருக்கும் இவரது இயற்பெயர் ஜே. தங்கவேலு. பாமர மக்களின் பேச்சு நடையிற் போன்றே, இலக்கிய நடையி லும் இன்கவிகள் பல இயற்றியுள்ளவர். நகைச் சுவையும் தேசீய உணர்ச்சியும் அழகிய கற்பனை யும் கொண்ட பாடல்கள். நாடு அடிமைத் தளை யில் இருந்து விடுபட்டதும், கிழக்கில் சுதந்திர ஒளி ஊர்ந்து வருகின்ற செய்தியை உணர்ச்சி மிகுந்த சந்தத்தில் உலகுக்கு அறிக்கையிடும் பாடல் இது.

வெள்ளி முளைக்குது

மெல்லக் கிழக்கினில் வெள்ளைபடியுது
வெள்ளி முளைக்குதடா - தமிழா
வெள்ளி முளைக்குதடா
துள்ளு சுதந்திர வெள்ளம் வருகுது
துள்ளி எழுந்திரடா - தமிழா
துள்ளி எழுந்திரடா

அச்சம் அகலுது ஆவி சிலிர்க்குது
அன்பு தழைக்குதடா - மனத்தில்
ஆனந்தம் பொங்குதடா
குச்சிலும் மச்சிலும் குஞ்சு குழந்தைகள்
குரல்கள் ஒலிக்குதடா - எங்கணும்
கும்மாளி கேட்குதடா.

காவலிருந்தவர் கைத்தடி பட்டவர்
சேவை பலிக்குதடா - பாரதச்
சீரை விளக்குதடா
ஏவலை எண்ணியே ஏங்கிக் கிடந்தவர்
காவலராயிடுவோம் - தாயினைக்
கண்ணெனப் போற்றிடுவோம்.

பட்டினி போக்குவம் துட்டரை நீக்குவம்
பஞ்சையைத் தூக்கிடுவோம் - அவர்க்கொரு
பதமும் தந்திடுவோம்
கொட்டு முரசத்தைத் தட்டித் திசைஎங்கும்
கொற்றம் முழக்கிடுவோம் - உலகெங்கும்
சுற்றம் பிடித்திடுவோம்.

★

ரா. அய்யாசாமி

'நந்தகோபாலன்' என்ற புனைபெயரில் ராம கிருஷ்ண விஜயம் போன்ற அத்யாத்மக் கலைப் பத்திரிகைகளில் பல கவிதைகளை வெளியிட்டிருக்கும் இவர், அகில இந்திய ரேடியோவில் இருந்து வருகிறார். கம்சனுடைய அழைப்பின் மீது வடமதுரைக்கு, பலராமனுடன் புறப்படும் கண்ணனுடைய ரதத்தில் முன்பு வந்து வழிமறிக்கும் ராதையின் உள்ளம் இதில் பேசுகிறது.

ராதையின் வேதனை

மதுரா புரியின் மாயம் முழுதும்
    மாற்ருன் வலிமை எளிதன்றே :
சிதையா அமுதக் கனலே வஞ்சம்
    செய்வான் பகைவன் அறியாயோ :

கருணு கரனே கண்ணு அழியாக்
காதல் நிதியே நீபோனல்
இருள் கூடியபுன் சிறையாய் விடுமே
இங்கே ஒளிவே றுணர்வேனே:

யமுனு நதியின் அலைமீ துருளும்
இசையைப் பருகித் திமிரேறி
அமரா துலவும் சிறுகாற் றெனஉன்
அடியின் போக்கில் திரியாமல்

எழுவிண் சுடரில் புவியின் உயிரில்
இன்பம் குலவும் உதயத்தே
பழமந் திரமே எனதுள் ளத்தின்
பரிதி : உன்னைக் காணமல்

குளிர்மார் கழியின் பனியால் சிறையில்
குறுகும் குயில்போல் குழைவேனே :
அளிமா முகிலே முகில்நீங் கினபின்
ஆடும் மயில்தான் உளதாமோ :

ஞாலத் தழகே நின்கைக் குழலின்
நாதத் திரளில் கலவாத
மாலைப் பொழுதின் நிறைவும் பால்போல்
வழியும் நிலவும் வீணன்றே?

கண்ணின் மணியே இதயத் தரசே
கண்ணு உன்னைப் பிரிவேனே ?
உண்ணும் சுவையே இசையே தெளிவே
உயிரின் சுடரே முறைதானே :

★

"கலைவாணன்"

சந்த இனிமையுடன் புதிய கற்பனை பலவற்றைக் கவிதைகளாக்கி யுள்ளார் க. அப்புலிங்கம். 'சர்வோதயம்' என்ற மகுடமிட்டு இவர் யாத்துள்ள காப்பியம் காந்தியடிகளைப் போற்றி எழுந்தது. கவிதைத் தொகுதிகளாக இதுவரை அச்சாகியிருப்பவை, "ஜீவானந்தம்", "நிவேதனம்", "மனச்சிமிழ்" ஆகியவை.

காட்டில் காதலனை நாடிச் செல்லும் கன்னியுடன், மின்மினியை உவமித்துக் காட்டும் கவிதை இது.

மின்மினி

கன்னங் கருக்கிருட் போதினில்
கை விளக் கோடு தனிமையில்
என்ன கருத்தில் அலைகிருய்
இங்ஙனம் ஏங்கும் ஏ, மின்மினி :

கூத லடிக்கையில் வானிலே
கொண்டல்கள் கூடிக் குதிக்கையில்
மாதர சேதனி யாகவிம்
மாதிரிச் செல்வதடாதடி :

ஏற்றி எடுத்துநின் கையிலே
ஏந்தி வரும்இவ் விளக்கொளி
காற்றில் அணைவதைக் காலமும்
காணுமோ தேனேசொல் லாயடி

விட்டுப் பிரிந்தநின் காதலன்
வேற்றிடம் நோக்கி நடக்கவோ
நட்ட நடுநிசிப் போதிலே
நாதியற் றிப்படிச் செல்கிறாய் ?

கூடிக் குலாவி என் நெஞ்சினைக்
கொள்ளை கொண்டோடிய காளையெங்(கு)
ஓடிப் பதுங்கியுள் ளானென
ஓர்ந்திலை யோஅடி மின்மினி :

★

"புதுமைப்பித்தன்"

வேளூர் வெ. கந்தசாமிக் கவிராயர் என்ற புனை பெயரில் வீறுதமிழில் புதுமைப்பித்தன் எழுதியுள்ள கவிதைகள் ஒரு சிலவே ஆயினும் **மணிக்கவிதைகள்.** இவரது இயற்பெயர் சொ. விருத்தாசலம். சிறுகதை இலக்கியத்தில் புகழ்பெற்ற ஆசிரியர். பத்திரிகைத் துறையில் பல ஆண்டுகளும், திரைப்படவுலகில் சிறிது காலமும் ஈடுபட்டிருந்து சிறு பிராயத்தில் மறைந்துவிட்டவர். இவர் தம் குடும்பத்திற்கு உதவி நிதிதிரட்டி அளித்தது தமிழகம். இவரது கவிதைகளைத் தொகுத்து வெளிட்டிருக்கிறார்கள் ஸ்டார் பிரசுரத்தார். இங்கு தரப்படுகின்ற பாடலே முதன் முறையாக அவரெழுதியதாகும் என்று நினைவு.

கடவுளுக்குக் கண்ணுண்டு

கடவுளுக்குக் கண் உண்டு
　　கண்ணோ நெருப்பு வைக்க :
தலையில் பிறையுண்டு
　　தணல் கையில் உண்டுண்டு :

கங்கை முடி சூடிக்
கால் தூக்கி ஆடுவதால்
அங்கை மழுவை
ஆரும் மறப்பாரோ?

பேய்க்கணங்கள் சூழப்
பித்தாடும் வேடமிட்டால்
வாய்க்கும் சுடலையிலே
வளரும் பொருள் எதுவோ?

கரிக்காலன் பாதம்
கைலாசம் காட்டிற்றும்
நரிக்கால் நடமிட்ட
நான்மாடக் கூடலிலே :

நீடு பொருள் கண்டு
நிமலன் அருள் கண்டு
வீடு பெற நின்ற
வித்தகர்கள் கண்டாராம் :

பாம்புக்குப் பல்லில்
பரனுக்குக் கண்டத்தில்
தங்கும் விஷம் தரணி
தங்கும் விஷமப்பா :

பூத்திருக்கும் பொட்டுப்போல்
பொறி கனலும் நெற்றிக்கண்
காத்திருக்கும் பூத
கணங்களுக்கே கைலாசம் :

★

"மாறன்"

திருச்சி வானொலிக் கலைஞர்களில் ஒருவரும் எழுத்தாளருமான கே. பி. கணபதி "மாறன்" என்ற பெயரில் சிறு கதைகள், கட்டுரைகள், நாடகங்கள் இயற்றியுள்ளார். ஒலிபரப்புக்காக வும், பிரசுரத்துக்காகவும் இயற்றப்பட்டவை பல. சிறு சிறு மணிக்கவிதைகள் சிலவும் இவ ரால் இயற்றப்பட்டுள்ளன. கவிதை உணர்ச் சிக்குத் தூண்டு கோலாக விளங்கிய தாரகை களைப்பற்றிய கவிதை இது.

தாரகைப் பெண்கள்

ஆகாய வாணியின் ஆடையிலே - தேவர்
அள்ளி இரைத்தாரோ முத்துக்களை
ஏக நிறத்தினில் பொட்டிடவே - அவள்
எங்நாட்டுப் பெண்ணிடம் கற்றனளோ!

நீலநிறத் திற்குப் பொட்டிடவே - அவள்
நீணிலப் பெண்ணிடம் கற்றனளோ
கோல மிடும்போது பொட்டுவைக் கும்தமிழ்க்
குமரிப் பெண்களைக் கண்டதுண்டோ!

விண்ணின் அழகைக் பெருக்கவரும் - ஒளி
வீசும் வைர மணிக் குவையோ
தண்ணென் றிருக்கின்ற பால்ஒளியை - மிகு
தாகத்தோ டருந்தும் பூச்சிகளோ!

ஆதித்தன் முன்னாலே தோன்றுவதால் - கற்பு
அழிந்து விடுமென்று எண்ணுவதோ
தாதிகள் போலவே சந்திரனை - இரவில்
சந்தித்து சல்லாபம் செய்வதேனோ!

இரவியைக் கண்டு ஒளிப்பதேனோ - பின்பு
இந்துவைக் கண்டு களிப்பதேனோ
தாரகைப் பெண்களின் தந்திரத்தை - நாளை
தாமரை சொல்லி சிரிக்குமடா!

★

"சிட்டி"

நகைச் சுவை எழுத்தாளர் பெ. கோ. சுந்தர ராஜன் 'சிட்டி' என்ற புனைபெயருடன் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகமானவர். நையாண்டிக் கவிதைகள், கட்டுரைகள் இவரது தனிச் சிறப்பு. 'வானொலி' என்ற ரேடியோ நிகழ்ச்சி வெளியீட்டின் ஆசிரியர். பாரதியாரின் இலக்கிய மேன்மையை மேனுட்டு விமர்சன முறையில் இவரும், காலம் சென்ற கு. ப. ரா. வும் சேர்ந்து எழுதிய கட்டுரைத் தொகுப்பின் பெயர் "கண்ணன்-என்கவி".

அலை கடலில் சென்றுவரும் மீனவர் உணர்ச்சியைக் காட்டும் பாடல் இது.

அலை கடலில்

நீலத் திரைக் கடலில் நாளைக் கடப்போம்
நினைவுக்கும் எட்டாத நாடுகள் செல்வோம்
மேலைத் திசைசென்று மீண்டு வருவோம்
மெச்சத் தகுந்த செல்வம் கொண்டு வருவோம்.

ஆழ்கடலின் மேல்பரப்பில் ஆடிவருவோம்
அலைத்திடும் புயலுக்கு அஞ்ச மாட்டோம்
மூழ்கி நல் ஒளிதரும் முத்தை எடுப்போம்
மொய்த்து வரும் மீன்களைப் பிடித்திடுவோம்

பாய்விரித்தே மிதந்து பாடி வருவோம்
பவளக் கொடிபடரும் தீவை அடைவோம்
ஓய்வற்ற திரையினில் உழைத்திடுவோம்
ஒவ்வொரு நகர்த் துறையில் தங்கிவருவோம்

"சாலிவாஹனன்"

'கலாமோஹினி' என்ற இலக்கியப் பத்திரிகையைத் திருச்சியில் நடத்திக் கொண்டிருந்த வி. ரா. ராஜகோபாலன் கவிதைகள் பலவற்றை எழுதியுள்ளவர். 'யோகம்' என்பது இவர் இயற்றிய அச்சேருத காப்பியம். பகுதிகளாகப் பத்திரிகைகளில் மட்டுமே வெளிவந்துள்ளது. பஞ்ச தந்திரக் கதைகளைப் பாடல் வடிவமாக அமைத்திருக்கிருர். விக்ரமாதித்தன் கதை இப்போது பாடலாக அமைந்து சுதேசமித்திரனில் வெளி வந்து கொண்டிருக்கிறது. புதுவாழ்வின் தொடக்கத்தில் துணைவியை நோக்கித் தலைவன் கூற்ருக அமைந்த பாடல் இது.

யோகம்

என் நெஞ்சத்து அரியணையின்
ஏகத் தனித் துணையே :

நெருப்பாணை இட்டுரைத்து
நெஞ்சிற் கலந்து விட்டோம்
பருவக்கை விரல் கோத்துப்
புது வாழ்வுக்கு இசைந்து நின்றோம்.

மணப் புகையில் நீராஞய்
மாலைவிழ ஒன்றிவிட்டோம்
கணத்தில் பலயுகங்கள்
கண்டறிந்தோர் போலாஞேம்

பேசத் துடித்தெழுந்தோம்
பேரன்பில் தழுதழுத்தோம்
யோசிக்காப் புத்துறவின்
புளகத்தில் ஒன்றிவிட்டோம்

விழிகள் தழுவினவோ
விண்ணின்பம் கூடியதோ
அழகாம் எழிற் கவிதை
ஆனந்தம் உயிர்த்தது அங்கு

வெடித்தவிழித் துயர்த்துளியில் .
வேதனையின் உயிர்ப்பு உணர்ந்தோம்
முடிவற்ற காலப்பாழ்
முன்னுல் கிடக்கிறது

என் ஆசைப் பெட்டகத்தில்
இன்பங்கள் நிரப்புவையோ
என்நற் கனவிருளின்
எழில் நிலவாய்த் தோன்றுவையோ ?

✶

சக்தி சரணன்

ஸ்ரீரங்கம் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரிய ராக இருக்கும் 'சக்திசரணன்' இயற்பெயர் கே. கே. நரசிம்மன். வானொலிக் கவியரங்குகளில் பங்கு பற்றியிருப்பவர். கவிதை நாடகங்கள் பலவும் ஒலிபரப்பப்பட்டிருக்கின்றன. இலக்கி யச் சொற்பொழிவுகள் ஆற்றுவதில் வல்லவர்.

உலக அரங்கில் உயிரை நடமாடவிட்ட தெய்வக் கருணையை வியக்கின்ற பாடம் இது.

என் சொல்கோ

செல்லரிய முள் நெறியில்
　　தேய்ந் தொலிக்கும் மூங்கிலின்பால்
மெல்லத் தன் அடிபெயர்த்தே
　　மேவிஒரு கணுக் கொணர்ந்து
நல்லிசைகள் காதார
　　நனிபொழிந்தே இன்பூட்டும்
புல்லாங் குழல்உருவில்
　　புரிந்தவரை என்சொல்கோ

வெற்பினிடைப் பிளவினிலே
வெயிலினிலும் மழையினிலும்
அற்பமுறக் கிடந்த தொரு
அசைக் கரிய பாறையினை
அற்புத மென்றனை வோரும்
ஆச்சரிய முற்றிடவே
சிற்பமதாய்ச் சிலையுருவில்
செய்தவரை என் சொல்கோ

வாடி யொரு மூலையிலே
வாழ்விழந்தே கிடந்தேனைத்
தேடியொரு புன்சிரிப்பால்
திறனூட்டி உலகமெனும்
நாடகத்தின் நடுவண்மிக
நல்லதொரு பாத்திரத்தின்
வேடமதில் வரப் புரிந்தாள்
மேன்மையினை என்சொல்கோ

★

தீபன்

ரஸிகமணி டி. கே. சி. அவர்களின் அருமைப் புதல்வர் தீர்த்தாரப்பன் என்கிற செல்லையா அவர்கள்தான் 'தீபன்'. இளம்பிராயத்தில் அமரரான இவர் கருவிலே திருவுடைய கலைஞர். இவரது கவியுள்ளத்திற் கனிந்த பாடலுக்கு ஒரு எடுத்துக்காட்டு இது.

சூரியோதயம்

சூரியோதயத்தைப் பாருங்கடி-அந்தச்
சோதியில் மனமும் சேருங்கடி
வாரிதியிலொரு சூரிய காந்தி
மலர்ந்து வருகுது பாருங்கடி

நீலக் கடலினுக் குள்ளிருந்தே - அது
நிமிர்ந்து நிமிர்ந்து பார்க்குதடி
நாலி லொருபங்கு தோணுதடி - இப்போ
நல்லதோ ரழகாய்க் காணுதடி

முற்றிலும் வட்டமாய் ஆச்சுதடி - இப்போ
முன்னைவிடப் பெரி தாச்சுதடி
சுற்றி யுள்ளபொருள் அத்தனையும் - அதன்
சோதிசென் றணைந்து முத்துதடி

ராத்திரி எங்குதான் தங்குமோடி - அது
ராத்திரி யெல்லாம் உறங்குமோடி
காத்திருப்போமென்று வந்ததோடி - நம்மைக்
காணவேதான் இங்கு வந்ததோடி.

கட்டுமரமொன்று காணுதடி - அது
கதிரவனை முட்டப் போகுதடி - கை
கொட்டி அதனை நிறுத்துங்கடி - அது
முட்டிவிட்டால் பெரு மோசமடி.

ஈட்டிகளை எங்கும் வீசுதடி - கண்கள்
ஏறிட்டுப் பார்க்கவும் கூசுதடி
வீட்டுக்குப் போகலாம் வாருங்கடி - நாளை
விடியுமுன் வந்து நாம் பார்ப்போமடி.

★

வித்துவான் வி. துரைசாமி

திருச்சி ஈ. ஆர். உயர்நிலைப் பள்ளியின் தமிழ் ஆசிரியர். நெடுங்காலமாகக் கவிதைகள் இயற்றியும், கவியரங்குகளில் தோன்றியும், கவிதை நாடகங்கள் பல ஒலிபரப்பியும் வந்திருப்பவர்.

தமிழ்நாட்டுச் சிற்பக்கலை, உயிர்பெய் ஓவியங்களை உருவாக்கும் வல்லமையை வியந்து மகிழும் ஒரு கற்பனைக் காட்சி இந்தப் பாடல்.

நட்டகல்

காலைக் கதிரவன் தோன்றிவிட்டான் - அவன்
காதலிமார்களும் பூத்துநின்றார்
சீலத்துடன் செபம் செய்துநின்றார் - பலர்
சித்திரச் சோலைக் குளத் தருகே.

வண்டுகள் பாடும் இசையினிலே - பல
வானரங்கள் தம் வசமிழக்க
கொண்டை முடித்துக் குடத்தினை ஏந்திய
கோதையர் பற்பலர் கூடிவந்தார்.

ஊர்வம்பில் மூழ்கிய ஒண்டொடியார் - பலர்
உத்தரியம் சற்று ஒதுங்குவதை
ஆர்வம் கொழித்திடும் ஆடவர் உள்ளம்
அழிந்திடக் கண்ணில் அருந்தி நின்றூர்.

வேய்ங்குழல் ஊதிச் சிறூர்களெல்லாம் - அங்கு
வேடிக்கை பேசி விதம்விதமாய்
பாய்ந்திடும் கன்று பசுக்களை மேய்த்தனர்
பச்சைப் பசேலென்னும் புல்வெளியில்

வன்னக் குளத்தின் வடபுறத்தே - இந்த
வையகம் காணு வகையினிலே
தன்னைத் தனக்கு நிகர்சொலவே - ஒரு
தையலும் நின்றனள் தான்தனியாய்.

இத்தனை பேரெழில் எங்குபெற்ருள் - இவள்
இத்தரைப் பெண்ணோ இயக்கி கொலோ
சித்தம் மயங்கிச் செயல்மறந்தேன் - என்
சிந்தை கவர்ந்து சிரித்து நின்ருள்.

ஆயிரம் ஆயிரம் எண்ணம் ஐயா - மனம்
ஆழ்கடல் போல்அலை வீசுதையா
வாயைத் திறந்தொரு வார்த்தை இல்லை - ஆனுல்
வற்ருத பார்வையோ வாடவில்லை.

நெஞ்சைக் கல்லாக்கி நிமிர்ந்து நின்றேன் - அந்த
நேரிழை நிற்கும் இடம் நகர்ந்தேன்
நஞ்சை என் உள்ளத்தில் ஊட்டிவிட்டாள் - அங்கு
நட்டகல் ஆகி நகைபுரிந்தாள்.

★

கோபிநாதன்

சென்னை அரசினரின் ஆவணப் பதிவு இலாகா வில் பதிவாளராகப் பணிபுரிபவர். தஞ்சை கலைக் கூட அமைப்புப் பணியில் ஊக்கத்துடன் கலந்து கொண்டவர். ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் புலமை பெற்றவர். தேர்ந்த இலக்கியத் திறனாய் வாளர். கவியரங்கேறிப் பாடிவருபவர். சொற் பொழிவாளரும்கூட.

மனத்திரையில் வந்து பதியும் அதிசயங்களைக் கவிதையாக்கும்போது, காட்சி இன்பம் முழுதை யும் பேசிவிட முடியவில்லையே என்ற கவி இத யத்தின் ஏக்கம் இந்தப் பாடலில் பேசப்படு கிறது.

என்னே ?

வானெட்டும் பறவையைப்போல் வாழும் சூழல்
வாராதா என்றேங்கும் உள்ளம் ஏனோ
ஊன்ஒட்டி நிற்கின்ற உடலுக்குள்ளே
ஒளித் திருக்கும் உண்மைஇது என்னே என்னே :

சிந்தையினில் அரும்பிவரும் செய்கை எல்லாம்
சிவப்பேறி மலராமுன் தீய்ந்து போதல்
முந்தைவினை ஒன்றெழுந்து மூண்ட தாலோ
முற்றாத தவமேயான் முயன்ற வாறோ!

அறிவூறிக் கனன்றுவரும் அழகை ஆகா
அழகுதமிழ்ப் பொற் சிமிழில் அடைக்கும்போது
குறி தாண்டிப் பட்டுவிட்ட கோலைப் போலக்
குறைபட்டுப் போகுமொரு கொள்கை என்னே?

பெருநெறியிற் பேய்மதியைப் பிறழ்ந்திடாமற்
பிடித்திழுத்து நிறுத்திடினும் பிறிதே நாடி
வரும் அவற்றை ஓராது வாய்த்த வாழ்வின்
வழிசென்று நம்பிக்கை வறள்வதேனோ?

தினம் தினமும் தெய்வத்தை நாடித் தொட்டு
தித்திக்கும் இடையிடையே திகைக்கும் செய்கை
மனம் ஒன்றை வினைச் சுழலில் வைத்துக் கோத்து
மானிடனாய் எனைப்படைத்த மாயம் தானோ?

★

அழ. வள்ளியப்பா

குழந்தைகள் குதுகலித்துப் பாடுவதற்கான கவிதைகளை இயற்றிப் புகழ் பெற்றிருக்கும் இவர் "குழந்தைக் கவிஞர்" என்றே சிறப்புப் பெயர் பெற்றவர். இவரது 'மலரும் உள்ளம்' என்ற கவிதைக் கொத்து, குழந்தைகளின் வயதையும் மனப் போக்கையும் அனுசரித்து இயற்றப் பெற்ற பாடல் தொகுதி.

பெற்றாள் வளர்த்தாள் பேரிட்டாள்
பெற்றபிள்ளை பித்தானால் என் செய்வாள் ?

இந்தக் கருத்தைச் சிறுகுழந்தைகள் உணர்ந்து தெளியும் பொருட்டு இயற்றப் பெற்ற பாடல் இது. பெரியவர்களுக்கும் இது பொருந்தும் உபதேசம்தானே :

அம்மாவின் கவலை

குழந்தை பிறந்தது-பிறந்ததுமே
குக்குவா சத்தம் எழுந்ததுவே
அம்மா அந்தக் குழந்தையினை
ஆர்வத்துடனே பார்த்தனளே
கண்ணைப் பார்த்தாள் ஆசையுடன்
கண்டாள் அதனில் ஒளியினையே
என்றன் குழந்தை குருடல்ல
என்றே அம்மா மகிழ்ந்தனளே

முகத்தைப் பார்த்துச் சிரித்திடுமாம்
மூன்று மாதக் குழந்தையினைக்
கையைத் தட்டி அழைத்திடுவாள்
காதால் கேட்டுத் திரும்பிடுமாம்
என்றன் குழந்தை செவிடல்ல
என்றே அம்மா மகிழ்ந்திடுவாள்.

ஒன்பது மாதம் சென்றதுமே
உப்புப்புப்பெனக் கூறிடுவாள்
அம்மா சொல்வதை அழகாக
அந்தக் குழந்தையும் கூறிடுமாம்
என்றன் குழந்தை ஊமையென
எவரும் கூறுர் என மகிழ்வாள்

பத்துமாதம் ஆனதுமே
தத்தித் தத்தித் தவழ்ந்திடுமாம்
அத்துடன் நிற்கப் பழகிடுமாம்
அம்மா அதனைக் கண்டதுமே
என்றன் குழந்தை சப்பாணி
இல்லை யென்றே மகிழ்ந்திடுவாள்

அப்புறம் ஒரு சில மாதங்கள்
ஆனதும் அந்தக் குழந்தையுமே
நன்ருய் நின்று நேராக
நடக்கப் பழகிடும் அதுகண்டு
என்றன் குழந்தை முடமல்ல
என்றே அம்மா மகிழ்ந்திடுவாள்

கூனுய்க் குருடாய் இல்லாமல்
கூப்பிடும் குரலைக் கேட்பவனுய்
இருந்தும் நல்லகுணம் எதுவும்
இல்லாதிருந்தால் என்ன பயன் ?

அம்மா மகிழ்ச்சி கொள்ளுவளோ
அதிகத் துயர்தான் அடைந்திடுவாள்
பத்துமாதம் சுமந்தென்ன
பாடுபட்டு வளர்த்தென்ன ?
எத்தனை கஷ்டப் பட்டென்ன
இதுபோல் பிள்ளை இருக்கிறதே
என்றே எண்ணி வருந்திடுவாள்
என்றும் கவலை கொண்டிடுவாள்.

"கல்கி"

பாரதிக்குப் பின்னர் மொழிவளர்ச்சியில் பற்பல புதிய பாதைகளை வகுத்துக் கொடுத்து புதிய எழுத்தாளர் பலருக்கு ஆதர்சமாக விளங்கிய ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி, அருமையாகச் சில கவிதைகளும் இயற்றியுள்ளார்.

அவருடைய இலக்கிய ஆற்றல், அவரது கவியுள்ளத்தின் விளைவு. அவரது கவித்வ சக்தியனைத்தையும் வசன காவியங்களாகப் பெற்றது தமிழ். இதோ அவரது கவிதைகளில் ஒன்றைக் காண்கிறோம்.

சொல் கிளியே!

செங்கனி வாயில் ஒரு
வேய்ங்குழல் கொண்டிசைத்து
தேனிசைதான் பொழிவோன்
யார்? யார்? யார்? கிளியே!

செந்தாமரை முகத்தில்
மந்தகாசம் புரிந்து
சிந்தை திறையாய்க் கொள்வோன்
யார்? யார்? யார்? கிளியே!

கண்ணன் என்றங்கேயொரு
கள்வன் உளன் என்று
கன்னியர் சொன்னதெல்லாம்
மெய்தானோ கிளியே!

வெண்ணெய் திருடும்பிள்ளை
என்னுளம் கவர்ந்ததென்ன
கண்ணால் மொழிந்ததென்ன
சொல்வாய் பைங்கிளியே!

தஞ்சம் எந்தனுக்கு அவன்
திருவடி யன்றி வேறே
தரணியில் இல்லையென்று
சொல் சொல் சொல் கிளியே!

★

"குயிலன்"

தமிழ்ச் சொல்லாட்சியும் பண் அழகும் கொண்ட கவிதைகள் பலவற்றை அவ்வப் போது எழுதிவரும் 'கவிஞர்' குயிலன்.

இருளில் ஏற்றிய விளக்கு இதயத்தில் சுடர்கின்ற எழுச்சிக்கு உவமை என்று இந்தச் சிறிய பாடல் காட்டுகிறது. கருத்துச் செறிவுடையது.

இருளும் ஒளியும்

அந்தி மயங்கிடும் நேரம் - ஒளி
ஆட்சி மறைந்திடு நேரம்
வந்திருள் சூழ்ந்திடு நேரம் - வண்ண
வானம் இருண்டிடு நேரம்.

வீர சுதந்திர நாட்டை - ஆளும்
வீண்வெறி கொண்ட அரக்கன்
போரிட்டு மக்கள் இரத்தம் - மிகப்
பொங்கி வழிந்திடச் செய்து

பார்கொளும் செய்கையைப் போலே
பரிதியைக் கவ்விட வேண்டி
கார்இருள் என்னும் அரக்கன் - கொடும்ஒ
கைகலந்தான், அட! போலும்

வானமெலாம் வெறும் ரத்தம் - மலை
வாவியெலாம் வெறும் ரத்தம்
ஈனஇருளிடம் தோற்று - ஒளி
எங்கு மறைந்தது? காணோம்!

காரிருள் போக்கிட வேண்டி - வீதிக்
கம்பங்கள் மீதிட்ட தீபம்
பேரடிமைமிகு நாட்டில் - எழப்
பெற்ற சுயேச்சையின் எண்ணம்

அடக்கு முறை என்ற காற்று - அதை
அணைக்க முயன்றது, பாவம்
நடக்கும் அதன்செய லப்போ - மறு
நாளில் உதித்திடும் சூர்யன்.

★

"கண்ணதாசன்"

சமூக சீர்திருத்தக் கொள்கைகளுக்காக எழுதிவரும் இவர் இயற்பெயர் முத்தையா.

'தென்றல்' பத்திரிகையின் ஆசிரியர். பற்பல நெடிய தொடர்களும் சிறு கவிதைகளும் இயற்றியுள்ளார். புதுமண மக்களுக்குக் கூறும் வாழ்த்துப் பாடல் இது.

பாடாய் தும்பீ

நல்லிசை வீணை நங்கையும்—மீட்டும்
நயக் காந்தள் விரல் நம்பியும்—இன்று
சொல்லொடும் பொருளாய் ஒன்றினர்—அதனால்
சுகத்தைக் கூறாய்; கூறாய்தும்பீ!

மென்மையும் வன்மையும் எதிர்மறை—ஆயின்
மீதுறும் காதலுக்கு அதுவே சுகமென
தொன்மையும் தூய்மையும் தோயும் தமிழின்
சுகத்தைக் கூறாய், கூறாய்தும்பீ!

இரவும் பகலும் சுழற்சியில் தோன்றினும்
இதுஇரா இதுபகல் எனும்நினைவின்றி
உறவும் உரிமையும் ஊடலும் நாடலும்
உயிர் உடல்கொள்கெனப் பாடாய் தும்பீ!

உயர்மலை முகட்டில் ஊறும் பனித்துளி
உயிர்தரும் நன்னீர் ஆய் அம்மலைக்கீழ்
மடிவிரித்திருக்கும் மண்ணிலே ஊர்வபோல்
வாழ்கெனப் பாடாய்; பாடாய் தும்பீ!

குயிலும் மயிலும் நிலவும் தென்றலும்
கோடிநாட் புலவர் கூறிடும் வார்த்தைகள்
குயில் மொழி மயில்நடம் குளிர்பூந் தென்றல்
குடும்பந் தான்எனக் கூறுய் தும்பீ!

ஆவொடுங் காளை மாவொடும் முல்லை
பாவொடும் நல்லிசை காவொடும் தென்றல்
பூவொடும் தேனீ பொன்னொடும் நல்லொளி
மேவிடும் வாழ்வுறப் பாடாய் தும்பீ!

பாடாய் தும்பீ! மணவறைப் பாட்டு
பாடாய் தும்பீ மலரணைப்பாட்டு
பாடாய் தும்பீ மழலையின் பாட்டு
பாடாய் தும்பீ நாடெலாங் கேட்க!

★

நாவற்குழியூர் நடராசன்

ஈழநாட்டுக் கவிஞர்களில் ஒருவர். இலங்கை வானெலியில் தமிழ்த் துறைப் பொறுப்பில் பணி யாற்றி வருபவர். பத்திரிகைகளில் அவ்வப் போது கவிதைகள் எழுதிவந்திருக்கிருர்.

இளங்கோவினுடைய சிலப்பதிகாரம் தமி ழன்னையின் காற்சிலம்பு என்ற கருத்தை வியந்து பாடும் சந்த இனிமையுடைய பாடல் இது.

சிலம்பொலி

கேட்குது மணி ஓசைபோலக்
சிண் கிணீர் என—எனே
வாட்டுதந்த வனிதை காலின்
வளை சிலம்பொலி

அள்ளு தெந்தன் நெஞ்சை—அச்
சிலம்பரற்றலே
கொள்ளுதந்த நூபுரத்தில்
கோடி ஆசைகள்

ஆடும் அந்த அமிழ்தின் நல்ல
ஆரணங்கு அடிக்கு—இசை
பாடு தந்த மங்கைகாலிற்
பாத சங்கிலி

கீதம்பாட வல்ல நல்ல
கிண் கிணீயதுன்—செம்
பாதம்சேர என்னடீ
பாக்கியம் செய்தாய்

யாவன் செய்ய வல்லன் இன்ப
யாழ்த் தமிழ் நங்காய்—இளங்
கோவன் செய்துனக் களித்த
நூற்சிலம்பு போல்.

தங்க மேனித் தமிழ் அணங்கே
தாரணிக் கெழில்—உன்
பொங்கு காலில் மேவும் அந்தப்
பொற்சிலம்படி !

★

நெற்குப்பை ராமசுப்பிரமணியன்

பத்திரிகைகளில் அவ்வப்போது கவிதைகளை எழுதிவரும் நெற்குப்பை ராமசுப்பிரமணியன் இன்றைய கவிஞர்களில் ஒருவர்.

எங்கும் இறைந்து - நிறைந்து கிடக்கின்ற எழிலைச் சித்திரம் செய்யும் பாடல் இது.

அழகு

பங்கயமலரில், காலைப் பரிதியின் ஒளியில், ஓடும்
துங்கநன் னதியில் சோலைச் சுந்தரவளனில் செய்ய
தங்கநல் வடிவில் மாலைத் தண்ணிய நிலவில் வானில்
தங்கிடும் மீனில் நல்ல தரளத்தில் அழகுகண்டேன்

வெள்ளிய சங்கில் நன்கு மின்னிடும் வைரந்தன்னில்
தெள்ளிய நீரில் நீந்தித் திரிந்திடும் கயலின் கண்ணில்
புள்ளிமா மயிலின் தேகப் பொலிவினில் இன்னும் இன்ப
வெள்ளமாய் அழகு தன்னை மேதினி யெங்கும் கண்டேன்

திதித்திடப் பேசும் பிள்ளைச் சிரிப்பினில் அழகு கண்டேன்
கதித்திடும் ஒளியும் மிக்க கண்ணினில் அழகு கண்டேன்
அதிர்த்திடும் ஓசைமேவும் ஆழியில் அழகுகண்டேன்
உதித்திடும் அழகை இங்கு உரைக்கவும் ஒண்ணுதம்மா;

சுருண்டு மேஓடும் நீரின் சுழியினில் அழகுகண்டேன்
மருண்டிடும் பார்வைமிக்க மானிடை அழகுகண்டேன்
பரவிய வெண்மையுள்ள பல்லினில் அழகுகண்டேன்
பருகிய அழகை இங்கு பகரவும் ஒண்ணுதம்மா!

வானிடைத் தோன்றும் வில்லின்
வண்ணத்தில் அழகுகண்டேன்
தேன்மொழி பகரும் கிள்ளைச்
சிறகினில் அழகு கண்டேன்
பான்மை கொள்பயிரின் நல்ல
பசுமையில் அழகுகண்டேன்
மேன்மை கொள் அழகை இங்கு
விளம்பவும் ஒண்ணுதம்மா!

பவளநன்னிறத்தில் முத்துப்
பனிபடர் பசிய புல்லில்
துவளுநற் கொடிபோல் வானில்
தோன்றிடு மின்னல் தன்னில்
சுவைதரும் கனியில் நல்ல
சுடர்தருமணியில் மேலும்
புவியெலாம் அழகு மேவும்
பூஞ்சோலை யானதம்மா!

✶

தமிழ்மகன்

பற்பல சந்தங்களில் இவர் கவிதைகள் இயற்றியுள்ளார். பத்திரிகைகள் பலவற்றிலும் இவரது கவிதைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. காலைக் கதிர் வருகையின்போது, திசையொளிரக் காணும் வியப்பே இந்தக் கவிதையாக உருப்பெறுகிறது.

உதயம்

முன்னிருட் கங்குலில் மின்னிய மீன்கணம்
முத்துப்பனியாச்சு - புல்மேல்
இறைத்த மணியாச்சு - வயதுக்
கன்னியர் செப்பொடு தம்மில்லம் விட்டாற்றைக்
கானநடந்தாச்சு - கன்னத்தில்
நாணம் படர்ந்தாச்சு :

மேலைநெடுவானில் கோலநிலா வட்டம்
மேனிவெளுப்பாச்சு - உயிரோடு
ஊனில் களிப்பாச்சு - இளைய
காலை நளினிக்குக் கட்டியங் கூறிப்பூங்
காவும் விழிப்பாச்சு :- கண்முன்னர்
யாவும் செழிப்பாச்சு :

ஓடை மதகு நீரோடொளிச் செங்கதிர்
ஊடிச் சிலிர்த்தாச்சு நுரைநுரை
ஆடிச் சலித்தாச்சு - முகிலில்
மூடமிடும்பனிக் கூடம் விலகிநம்
முற்றம் ஒளியாச்சு - இயற்கை
மற்றும் எழிலாச்சு :

மாடப் புறாவும் செங் காடைப் புள்ளும் திசை
மாறிப் பறந்தாச்சு : -சிவ்வென
ஏறி விரைந்தாச்சு - அதனைப்
பாடப் பாடப் புதுப் பாங்கினில் பண்மெருடும்
பரவசம் உண்டாச்சு - இறைவனின்
அருள்வசம் கண்டாச்சு :

பழனக் கதிர்கள் முழுதும் தலை சாய்ந்து
பாரில் படிந்தாச்சு - துயர்இனி
ஊரில் விடிந்தாச்சு - வீட்டின்
இழை நறுங் கோலமெலாம் பரங்கிப்பூ
இதயம் மலர்ந்தாச்சு - அடடே பொன்
உதயம் புலர்ந்தாச்சு.

★

என். எஸ். சிதம்பரம்

தமிழிசை அரங்குகளுக்கான நிறைந்த இசைப்பாடல்களை அளித்திருக்கும் கவிஞர். வாசகர்களுக்காக மணிக்கவிதைகளும் இயற்றியுள்ளார். இவரது நூல்கள் சில:- இசைக்கனிகள் - பாடும் கீதம் கேட்குது - தமிழிசைப்பாடல்கள், வள்ளல் கீதம் - ஆத்மாஞ்சலி பராமுகம் ஏன் ? இவரது பாடல்களை இசைத்தட்டுக்களிலும் வானொலியிலும் கேட்டுத் தமிழ் மக்கள் மகிழ்ந்து வருகின்றனர்.

யாரறிவார் ?

எழில் நிலவின் முன்னிலையில்
இசைபாடிக் கரங் கோத்துப்
பொழிலிடையில் குலவியதைப்
பொன்மயிலே யாரறிவார் ?

காலமெனும் நினைவு இழந்து
    கருத்து இரண்டும் கலந்து ஒன்ருய்க்
கோலமிகும் புவிமறந்து
    குலவியதை யார் அறிவார்?

வானத்து மதி அறியும்
    வண்டாரும் பொழில் அறியும்
தேனுதிர்க்கும் மலர் அறியும்
    தென்காற்றும் நன்கு அறியும்

நீ அறிவாய், நான் அறிவேன்
    நிலமக்ளும் தான் அறிவாள்:
தேயத்தார் அறியும் நாள்
    திருநாளாம்: மணநாளாம்:

★

மு. அண்ணாமலை

'தாமரைக் குமரி' என்ற கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் இவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர். கற்பனையும் கம்பீரமான நடையும் கொண்ட பாக்கள் பல இயற்றியுள்ளவர். பருவப் பூரிப்பில் திளைக்கும் பெண்ணுள்ளத்தை, கற்பனை கர்வம் மிகுந்த கவி இதயத்துடன் ஒப்பு நோக்கி மகிழும் கவிதை இது.

பொலிகின்றாள்

நின்றாடிக் கண்ணாடி முன்னேஓடி
நிறையழகு காண்பதற்கு நிற்பாள், அங்கே
அன்றலர்ந்த மலர்காண்பாள் ஆனந்தத்தால்
அழகுடலைப் பொற்சிலைபோல் நிறுத்திப் பார்ப்பாள்

மன்னனைப் போல் நடையிடுவாள் தன் கூத்தெல்லாம்
மறைந்தெவரும் காண்பாரோ என்று நாணி
ஒன்றிரண்டு முறை அங்கும் இங்கும் பார்ப்பாள்
ஒருவருமே இல்லையெனத் தெரிந்து விட்டால்

அன்னநடை எனச்சொல்லும் கவிஞர்வாக்கை
அப்படியே நம்பிடுவாள் நடந்து பார்ப்பாள்
தன்னடையைத் தன் மார்பைத் தானே நோக்கித்
தருக்கிடுவாள் இதழ்க்கடையில் சிரிப்பை வைப்பாள்
தன்எழுத்தைத் தன்பாட்டைத்தானே நோக்கித்
தனித்தந்தப் போதையிலே தனைமறக்கும்
பொன்னனை கவிஞனைப்போல் பூரிக்கின்றாள்
புதுமைக் கோர் புதுமையெனப் பொலிகின்றாளே :

★

வாணிதாசன்

புதுவையில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றி வரும் இவர் தமிழில் வித்வான் தேர்வும் ஃப்ரெஞ்சு மொழியில் பட்டமும் பெற்றவர். இயற் பெயர் 'எதிராஜ்' என்பது. சமூக சீர்திருத்தத் துறையில் நாட்டம் கொண்டவர். எளிய, மிடுக்கு நடை இவருடையது. இவரது நூல்கள் சில:—

கொடிமுல்லை, தமிழச்சி, தொடுவானம், எழிலோவியம்.

தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் சேரி வாழ்க்கை எழுப்புகின்ற கவிஞரின் உணர்ச்சிகள் இவை.

சேரி

வயலினைச் சுற்றிப் பார்த்துத்
திரும்பினேன் ; வளைந்த வாய்க்கால்
அயலுள்ள சேரிமட்டும்
அழைத்து வந்தென்னை விட்டுப்
பெயல் தங்கும் ஏரி நோக்கிப்
பிரிந்தது சேரிகண்டேன்
அயலவர்க் குழைத்துத் தேய்ந்த
அருந்தமிழ் மக்கள் கண்டேன் ;

நாட்டினைக் கலையை நாட்டு
மக்களை, அரசை, வாழ்வை
ஊட்டியே வளர்க்கும் தோளை
உழைப்பினைக் கண்டேன் அன்னோர்
பாட்டினால் கொழுக்கும் செல்வர்
கடுகுள்ளப் பண்ணைச் சேரி
காட்டிற்று . குடிசைப் பொத்தல்
காட்டிற்றே அரசினத்தை :

ஓடுகள் சாந்துரைக்க
ஒருபுறம் கிடக்கும் வார
ஆடுகள் வேலி ஓரம்
அசைபோடும் மேயும் நத்தை
ஓடுகள் கும்பலாக
ஒருபுறம் கிடக்கும்வேறு
தேடுதற் குணவு முண்டோ
பணக்காரத் திருடர் நாட்டில்

இடிந்து பாழான கோயில்
இருக்கின்ற சிலைகள் போல
இடிசுவர் மருங்கில் ஓர்சேய்
தூங்கிடும் இருக்கும் ஒன்று
மடிபிடித்திழுக்கும் ஒன்று
வயிற்றினைக் காட்டும் ஒன்று
கொடுஎனக் கேட்டுத்தாயின்
குற்றுயிர் வாங்கும் ஒன்றே

செல்லுண்டு மழையும் காற்றும்
சேர்ந்துண்ட குடிசைமுன்னர்
புல்லுண்ட நெல்விளைக்கப்
போனவனின் உணவுக்காக
எல்லுண்ட இரால் போல்நீண்ட
இருகையால் உலக்கை பற்றிச்
செல்லுண்ட நிலாமுகத்தாள்
நெல்குத்தும் செம்மைபாரீர் :

அடுப்பினில் புளிக்காக் கூழே
கொதித்திடும் அழும்பிள் ளைக்குத்
துடுப்பினைத் தூக்கிக் காட்டித்
தேற்றுவாள் இடதுகையின்
மடுப்பினில் தலையை வைத்து
வயிறெட்டித் தூங்கும் ஆளன்
நெடுப்பினில் உழைத்த தோளில்
நெஞ்சமும் கண்ணும் சேர்ப்பான்.

கடுவெயில் கார்வான் சூழ்ந்த
நள்ளிருள் தூறல் காற்றுப்
படுவெயில் எனப்பாராது
மற்றவர் பயனுக்காக

'இடுவெயில்' போல் உழைக்கும்
சேரிவாழ் ஏழைமக்கள்
கொடுவெயில் குளிர் மழைக்குக்
குந்திடக் குடிசையுண்டோ

உணவினைத் திருடி உண்டோர்
உயர்ந்தனர் தமிழகத்தில்
உணவினை விளைப்போர்க் கெல்லாம்
உணவிலை உயர்வேன் இல்லை
உணவன்றோ உயர்வு தாழ்வின்
ஆணிவேர்: ஏய்ப்போர் வாழ்ந்தார்
உணவினை உழைப்பை யார்க்கும்
பொதுவாக்க உயரும் வாழ்வே!

★

சாமி பழனியப்பன்

'புகழ்க்கன்னி' கவிதைத் தொகுதியின் ஆசிரியர். காரைக்குடி "வாரச் செய்தி" இதழாசிரியராகப் பணியாற்றியவர்.

திருக்குறட் காமத்துப்பாலைக் கற்று மகிழ்ந்த கவியுள்ளம், தனது இன்பத்தை வசன மணிகளாகப் படைத்த "காதல் இன்பம்" இவரது மற்றொரு நூல். எளிய நடையும், இனிய சந்தங்களும் கொண்ட தனிப்பாடல்களை அரங்கேற்றியுள்ளார். சீர்திருத்த வேகம் கொண்ட இவரது எழுத்துக்கு இந்தப் பாடல் ஒரு எடுத்துக் காட்டு. உழைப்பின் உயர்வை உலகம் புறக் கணிக்காமல் மதிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் எழுந்தது.

இப்புவியா காணும் ?

மாடி வீடுகள் அமைத்து
வாழவழி செய்து தந்தோன்
வாடுகிறான் வெம்பனியில் குளிரில் அவன்
வாட்டமதை இப்புவியா காணும் ?

வானத்து நிலவொளியின்
மென்மையன்ன நல்லிழையில்
ஆனஉடை நல்கும் அருந்தோழன் - அவன்
அரை உடையை இப்புவியா காணும் ?

நிலந் திருத்தி நெல்விளைத்து
நீணிலத்தை வாழவிப்போன்
உலர்ந்தவயி றோடுலவு கின்றான் - அவன்
உடல் உலர்வை இப்புவியா காணும் ?

இன்னல் நிறை ஆழியில்
இறங்கிநல்ல முத்தெடுத்து
மன்னுலகினுக் களிக்கும் தோழன் - அங்கு
மாய்வதனை இப்புவியா காணும் ?

பாம்பு புலி வாழுகின்ற
பாறை பலவுங் குடைந்து
ஆம்வகையில் பாதைசெயும் தோழன் - படும்
அல்லலினை இப்புவியா காணும் ?

★

" முடியரசன் "

"எக்கோவின் காதல்"கதைத் தொகுதி, 'காவி யப்பாவை' இசைத் தொகுதி, இவற்றின் ஆசிரிய ரான 'முடியரசன்' சிறந்த கவிதைகள் பல வற்றை இயற்றியவரும் ஆவார். இவரது கவிதை கள் இரண்டு சிறு தொகுதிகளாக வெளிவந்திருக் கின்றன.

குடும்பம் என்பது ஒரு காவியம். அதில் உள்ளார் ஒவ்வொருவரும் வாழ்வின் சுவை ஒவ் வொன்றையும் விளக்கும் ஏடுபோல்வர். இவ்வழ கிய காப்பியத்தை 'ஊரார்' அரித்துக் கெடுக்கா மல் தற்காத்துக் கொள்ளுதல் அறிவுடைமை என்ற கருத்தமைந்த பாடல் இது.

குடும்பம் ஒரு காவியம்

அன்பினுக்கோர் எல்லையெனும் அன்னை தந்தை
அறவுரைகள் எடுத்துரைக்கும் ஏடாம், இல்லாள்

இன்பமெனும் சுவையுணர்த்தும் ஏடாம் உள்ளம்
ஈர்க்கின்ற மழலைமொழிப் பிள்ளை நெஞ்சத்
துன்பறுக்கும் இசைச் சுரங்கம் உடன் பிறந்த
துணைவர்களோ தோள்வலிமை காட்டும் ஏடாம்
வன்புரைக்கும் நாத்தியவள் அவலம் என்னும்
சுவையினையே வடிகட்டி உணர்த்தும் ஏடாம்

ஆதலினல் குடும்பமது சுவையால் நெஞ்சை
அள்ளுமொரு காவியம் என்றறைதல்சாலும்
மோதலிலாக் குடும்பத்தில் பகைக்குணத்தை
மூட்டிவிடும் ஊராரோ காவியத்தைத்
தீதுறவே அரித்தொழிக்கும் அந்துப்பூச்சி
செல்கரையான் இவைபோல்வார் அவர்கள் பேச்சைக்
காதுமடுத்திட வேண்டாம் ஒதுக்கிவிட்டுக்
காவியத்தைக் காத்திடுக வாழ்வீர் நன்றாய்

☆

திருச்சிற்றம்பலக் கவிராயர்

திருநெல்வேலியைச் சேர்ந்த இவரது இயற் பெயர் தொ. மு. சிதம்பர ரகுநாதன். பற்பல கவியரங்குகளில் பங்கு பற்றியவர். சமூகச் சிறு மைகளைச் சீறும் புரட்சிக் கருத்துக்கள் வலிமை மிக்க சொற்களில் வடிவெடுக்கும் தனிப் பாடல்கள் இவரது சிறப்பு. இலக்கிய விமர்சகர். 'புதுமைப் பித்தன்' கவிதைகளைத் தொகுத்திருக்கிருர். கவிதையைப் பற்றிய ஆராய்ச்சி முன்னுரை இந்தத் தொகுப்பின் சிறப்பு. சிறுகதைகள் பல இயற்றியிருக்கிருர். "சாந்தி" என்ற மாதப்பத்திரிகையை நெல்லையில் இருந்து நடத்தி வருகிருர்.

காந்தியடிகள் மறைந்தபோது, அவர் விட்டுச் சென்ற 'ஒற்றுமை'க் கொள்கையை விடாது போற்றுமாறு மக்களைத் தூண்டும் பாடல் இது.

இலட்சியம்

சத்தியத்தின் இன்னுருவாய்
சாத்துவிகப் பேரொளியாய்
பத்தியங்கள் பலநோற்றுப்
பாரதத்து நோய்நொடியைக்
கத்தியற்று ரத்தமற்றுக்
களைந்தெறியப் பாடுபட்ட
சத்தியவான் போய்மறைந்தான்
சண்டாளன் கொன்றுவிட்டான்.

கடும்புலிகள் மத்தியிலே
கன்றேந்திச் சென்றது போல்
இடும்புற்ற நவகாளி
இருள்ஊடே ஒற்றுமையை
உடும்புப் பிடிப்போடு
உருவேற்றி வந்தவனைக்
கொடும்பாவி துப்பாக்கிக்
கொண்டல்லோ கொன்றுவிட்டான்

இந்தியர்கள் தம்நாட்டை
இரண்டாகப் பிளந்தாலும்
சிந்தையிலே பிளவற்றுச்
சேர்ந்தொன்றாய் வாழ்வதற்காய்
நொந்தும் நோன்புற்றும்
நொடிப் பொழுதும் சோராதான்
சிந்திவிட்டான் செங்குருதி
செத்துவிட்டான் இன்றைக்கு.

எங்குலத்து நாயகனின்
இலட்சியத்தை நிறைவேற்றச்
செங்குருதி வெள்ளத்தில்
சேர்த்திடுவோம் நம்கரங்கள்
நங்குலத்தைத் தீண்டிவரும்
நச்சரவை, வேற்றுமையை
பொங்கும் விஷக்கனலைப்
பொசுக்கிடுவோம் ஒன்றுவோம்.

★

அ. வெ. ர. கிருஷ்ணசாமி

இலக்கிய மறுமலர்ச்சிப் பத்திரிகைகளில் ஒன்ருன 'கிராம ஊழியன்' அதிபராக இருந்து நடத்தியவர். 'சிவாஜி'யின் துணை ஆசிரியராக இருப்பவர். சிறுகதை, சிந்தனைக் கட்டுரை, கவிதை இயற்றியுள்ளார். சிறந்த பேச்சாளர்.

இவரது சிந்தனைக் கட்டுரைகள் 'சித்தசாகரம்' என்ற நூல் வடிவில் மலர்ந்துள்ளன. பல தனிப் பாடல்களைக் கவியரங்கேற்றி யுள்ளார்.

சிந்தைக்கினிய, சீவனுக்கினிய செல்வம் சிறு குழந்தை. புத்தம் புதிய உயிர் போந்துவிளையாடும் அழகைக் கண்டு களிக்கும் கவிதை இது. குழந்தையே ஒரு கவிதை என்கிருர்.

குழந்தை ஒரு கவிதை

சின்னஞ் சிறு குழந்தை—எனது
சிந்தையின் தெள்ளமுது
சொன்ன மலர் உடலைத்—தொட்டால்
சோகம் தவிர்ந்துவிடும்.

பின்னி முடிச்சழகில்—உள்ளம்
பேதுறும் போதையிலே
சன்னிதி நின்றிருந்தால்—ஏழைச்
சஞ்சலம் என்ன செய்யும்?

வானத்து விந்தைஎலாம்—கொண்டு
வந்திடும் புத்துயிரில்
மோன முனிவரரும்—காண
மோகனம் ஆடிவரும்!

ஞான முதிர்ச்சியிலே—விளைந்த
ஞாலத் துயிர் விளங்கும்
ஆனதினால் சகமே—குழந்தை
அன்பில் சுகம் பெறுமே!

அன்னை மடியினிலே—அரி
ஆசனம் இட்டமரும்
அன்னையின் பொன்னுளமே - அதனுடை
ஆனந்த ராச்சியமாம்.

குழந்தை ஒரு கவிதை—எனக்குக்
கோமளச் செந்தமிழே!
அழகுச் சிறுகுதலை—எனது
அற்புதச் சொர்க்கமடா!

★

தொ. மு. பாஸ்கர தொண்டமான்

கம்பனுடைய கவிதைச் சோலையில் திளைத்த கவிஞர் சொல்லழகும் பண்ணழகும் கொண்ட கவிதைகள் பல இயற்றியிருக்கிறார். தமிழ் நாட்டின் சிற்பக் கலைச் சிறப்பை உணர்ந்து விமர்சனம் செய்யும் தனிச் சிறப்பு இவருடையது. கவனிப்பார் இன்றிக் கிடந்த அற்புதச் சிற்பங்களைத் தஞ்சையில் கலைக் கூடத்து அமர்த்தி அணி பெறச் செய்து ஆண்டுதோறும் விழா எடுக்கச் செய்தவர் இவர். இலக்கிய விமர்சனமும், மேடைப் பேச்சும் வாய்ப்பான வல்லமைகள். இவரது வாக்கு வளத்திற்கு எடுத்துக் காட்டாகத் திகழும் ஒருபாடல்.

காதலின் பொருள்

நீண்டு வளர்ந்த நெடுமுடியை நித்தம்
நீருண்ட மேகம் தழுவலையோ ?

நீலக் கடலிற் புரண்டுவரும் திரை
நேராய் ஒன்றொன்றினைக் கவ்வலையோ ?

ஓடும் சிறுநதி ஆடிவந்தே கடல்
ஓடு கலந்து குலாவலையோ ?

ஓலமிடும் வண்டும் கோல மலர்களில்
ஒன்றி யிருந்து தேன் உண்ணலையோ ?

இந்நிலம் தன்னிலே தன்னந் தனியாக
எய்திடும் ஓர்உயிர் எங்குமுண்டோ ?

என்னைக் கலந்துநீ இன்பந் தராவிடில்
யாது பொருள் இந்தக் காதலுக்கே ?

★

அ. முத்துசிவன்

தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் பேராசிரியராக விளங்கிய முத்துசிவன் மிகச் சிறந்த இலக்கிய விமர்சகர். அசோகவனம், கவிதை, மின்னல் கீற்று ஆகிய நூல்களை இயற்றியவர். நெல்லை இந்துக் கல்லூரியிலும் காரைக்குடி அழகப்பா கல்லூரியிலும் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய இவர் சிறு பிராயத்தில் மறைந்தது இலக்கிய உலகுக்கே பெரு நஷ்டம். மிகச் சிறந்த மேடைப் பேச்சாளராகத் திகழ்ந்தவர். மணிக் கவிதைகள் சில இயற்றியுள்ளார். கவியரங்குகள் பலவற்றில் பங்கு கொண்டவர். காதல் தெய்வத்துக்கு ஏற்ற காணிக்கை, காதல் நிறைந்த உள்ளமே என்ற நிரந்தரமான உண்மையை உவகை மீதூற அவர் பாடியுள்ள பாடல் இது.

காதல் தெய்வம்

தண்ணமுத மழைபொழியும் தாரகையின்
    நாயகமாம் தண்ணிலாவைத்
தகையுடனே பறித்தெனது தாழ்குழலி
    வான்நுதலேச் சாரவைத்தேன்

விண்ணுள்ளே மின்னெறிந்து வியன்சோதி
    துள்ளிவரும் மீனினத்தை
விரையாடும் கூந்தலிடை நிரையாகப்
    பெய்துயான் வியந்து நின்றேன்

மதிசெல்லும் விதியினை மணிக்கரத்தால்
    வாங்கி என்றன் மையல் நீரத்
துதிசெய்து திரைசெய்து தோலாத
    தெய்வ எழில் தொழுது நின்றேன்
கதிசேரும் இரவியின்தண் காமர் எழில்
    சோர்வதன்முன் கடிதுசென்று
வதிகின்ற சிந்துரத்தை மலர்வதனம்
    மாற்றிமிக மகிழ்ந்து நின்றேன்

அந்திவரும் வேளையிலே ஆதித்தன்
    தனைச்சூழ்ந்து அழகுசெய்யும்
சுந்தரப் பொன்கொடியினையே சுடர்த்தொடியால்
    வளைத் தெனது துதிக்கு வாய்ந்த
செந்திருவின் மலர்க் கரத்தே சேர்த்திட்டுக்
    காதலினைத் தேர்ந்து யானும்
வந்தித்தேன் வணங்கினேன் மனமாரப்
    பல்லாண்டு பாடி நின்றேன்.

வெண்ணிறத்த மதிக்கதிர்கள் வேணளவும்
கொடுபோந்து வேட்கைநிரக்
கண்ணினிய அம்பரமாய்க் கருத்துடனே
சமைத்தெனது காதலிக்கு
பெண்ணினிமை நலம் தோன்றப் பேரின்ப
மர்மங்கள் பெரிது தோன்ற
நண்ணிய பேராதரத்தால் நல்கிடவும்
காதலினை நயவாள் அந்தோ.

காதலுக்குக் கையுறையாய் கண்ணெதிர்ந்த
அழகெல்லாம் காட்டிநின்றும்
கதிரவனை உடுசிரையைக் கவின்மணக்கும்
நிலவுதனைக் கைகள் கூப்பி
ஏதமிலா அன்னவள்தன் எழிலுக்கே
பணிபுரிய இயற்றுவித்தும்
பேதையவள் காதல்நலம் பேசாதே
வீற்றிருந்தாள் பெரிதேபாவம்

உள்ளத்தை அள்ளிஎழும் உணர்ச்சி எனும்
உதிரத்தை ஒருங்கு சேர்த்து
ஊழியெனும் வெள்ளமென ஒருவாதே
உகுத்திட்டு நின்றபோது
கள்ளொத்த விழியாள்என் கருத்தெல்லாம்
கவர்ந்து வருகாதல் தெய்வம்
மெள்ளத்தன் உள்ளத்தை விண்டுரைத்தாள்
வெற்றியடா வெற்றி வெற்றி.

★

"செந்தாமரை"

சதாவதானி செய்குதம்பிப் பாவலரின் புதல்வரான கே. பி. எஸ். ஹமீது 'செந்தாமரை' எனும் புனைபெயரில் நூற்றுக்கணக்கான கவிதைகள் இயற்றியுள்ளார். வானொலிப் பணிபுரியும் இவரது பாடல்கள் எளிமையும், இனிமையும் புதுமை மணமும் பொலியத் திகழ்கின்றன. இதோ, அவரது 'டெலிபோன்' மணியோசை கேட்கிறது.

டெலிபோன்

இருந்த இடத்தி லிருந்த படியே
இருவே றிடத்திருந் திருவர் பேசிடும்
சொற்கள் எதிரெதிர் பாய்ந்து சென்றே
நிற்கவும் ஒலிக்கவும் நிதம் உதவுவாய்!
போட்டி வேகம் இவற்றுடன் போரிடும்
நாட்டவர் பேச்சு நேரம் தூரம்
என்னும் இரண்டையும் வென்றே இயங்க
நன்கிங் குழைப்பவர் நினைப்போல் யாருளர்?

ஒற்றைக் காதும் ஒருதனி வாயும்
கற்றைக் குழலினும் கரிய மேனியும்
வையகம் முழுதையும் கட்டி யணைத்தே
கையகத் தாக்கிடும் கோதில் ஆவியும்
கணகண எனமணிக் குரலிசை யெழுப்பிடும்
குணமும் கொண்டு, வாயையும் வாயையும்
காதையும் காதையும் வசமாய்ப் பிணைத்திடும்
மேதையாய்த் திகழ்வாய்! மேதினி மீதுள
வீட்டையும் வீட்டையும் ஊரையும் ஊரையும்
நாட்டையும் நாட்டையும் நலமுற இணைப்பாய்!
உலகினை ஒன்ருய் ஆக்கிட உதித்தவர்
குலத்தையும், தேசத் தூதுவர் குழுவையும்
சேர்ந்தவன் நானெனச் செப்புவாய்! சேவையில்
தேர்ந்த சேவக ஞகி மானிடர்க்
கென்றும் தொண்டுகள் இயற்றுவ தொன்றே
உன்றன் உன்னத இலட்சியம் என்பாய்!
பொய்யை மெய்யாய் மெய்யைப் பொய்யாய்ச்
செய்யும் செப்படி வித்தையிற் சிறந்த
வித்தகர் மோதிடும் வாணிபத் துறைக்கோர்
உத்தம ஞகி உருட்டுவாய் பணத்தை;
பண்டமும் பொருளும் பற்பல நிதியமும்
கண்டம் விட்டுக் கண்டம் நகர்ந்தே
ஊர்வலம் வந்திவ் வுலகினைச் சுற்றிச்
சீர்நலம் செழிக்க வழிவகை செய்வாய்!
ஊசலாடிடும் உயிரினுக் குதவ
வாசலின் முன்னர் வைத்திய வசதி
உடனடி வந்திட, உறுத்திடும் யமபயம்
கடந்திடச் செய்வாய்! கவலை தீர்ப்பாய்!
காதலர் நெஞ்சினை வெதுப்பிக் கொடிய
பாதகம் விளைத்திடும் பிரிவெனும் துயரம்

பண்ணிடும் பாட்டைத் தூதெடுத் தேக
வண்டும் முகிலும் பாங்கியும் பறவையும்
எதுவும் வேண்டாம் எனநீ இயம்புவாய்!
புதுயுகக் காதலைப் புதுப்புது விதத்தில்
வளர்ப்பாய்! அகத்துறை இலக்கிய விதிமுறை
வளர்த்த துறைகள் மறைந்திட வைப்பாய்!
பேட்டி தந்திட மறுத்திடும் பேரின்
வீட்டினுள் நுழைந்து வேண்டிய துரைத்திட
துடிப்பவர்க் குற்ற துணைவ னாகி
அடிப்பாய் மணியை! ஓயா தடிப்பாய்!
எழுத்தில் எழுதுதல் நேரில் இயம்புதல்
ஒழுங்கிலை என்னும் ஓர்நிலை வருகையில்
உன்னைச் சரண்புகும் ஒவ்வொரு வருக்கும்
உன்றன் ஒத்துழைப் புண்டென் றுரைப்பாய்
எத்தனை சேவை நீயிங் கியற்றினும்
எத்தனை மகிமை இங்குனக் கிருப்பினும்
உன்றன் மேலே உண்டெனக் கொருகுறை!
என்றன் சேவகன் எனவந் தென்றன்
வீட்டினுள் நுழைந்தாய்; நுழைந்தது முதலாய்
ஆட்டி வைக்கிறாய் ஆணைகள் இட்டெனை!
உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதும்
பண்ணொன் றிசைத்துப் பாடும் பொழுதும்
நண்பர் நடுவிருந் தின்னுரை நிகழ்த்தி
உண்மையில் உள்ளம் மகிழும் பொழுதும்
முதலடி எடுத்துக் கவிதை முழுதையும்
பதமுற முடித்திடப் பார்க்கும் பொழுதும்
புத்தகத் துள்ளம் புதைத்திடும் பொழுதும்
பத்தியில் மனலயித் திருந்திடும் பொழுதும்
இங்கிதம் மறந்தே இடைமறித் திடர்தர
பொங்கி இரைவாய்! பொறுமை இழப்பாய்!

கொஞ்சம் பிந்திடில் கொட்டி முழக்கி
நெஞ்சம் அலற நெடுமணி அடிப்பாய்!
என்றன் சேவகன் எனவந் தென்னை
உன்றன் சேவக னுக்கி உவப்பாய்!
எக்குறை சகிக்கினும் இங்குனக் கடிமையாம்
இக்குறை சகியேன்! இக்குறை சகியேன்!

திருலோக சீதாராம்

இந்தக் கவிதைத் தொகுப்பின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நான், என்னைப்பற்றி என்ன சொல்ல ? நல்ல தமிழ்க்கவிதைகளை நாடிப் பயில் வதும் நாடெலாம் சென்று அவற்றின் நயம் தெரிய, பலரறியப் பாடி மகிழ்தலும் எனது இன் பம். தமிழகத்தில் மட்டுமல்ல; பன்மொழிக் கவியரங்குகளிலும் கலந்து கொண்டு இன்றைய தமிழ்க் கவிஞர் மரபின் புகழைப் பரப்பும் வாய்ப் புக்கள் பல எனக்குக் கிடைத்திருக்கின்றன. நான் இயற்றிய 'கந்தர்வ கானம்' என்ற காப் பியம் திருச்சி வானொலி நாடக விழா ஒன்றில் ஒரு மணிநேரம் இசைச் சித்திரமாக ஒலிபரப்பப் பட்டது. தமிழ் நாட்டின் பற்பல கவியரங்கு களிலும் என்பாடல்கள் அரங்கேறியிருக்கின் றன. எனக்கு இன்னமும் அதிசயமாகத் தோன் றும் ஒரு புதிர் இதோ !

அதிசயம்

காலையில் மோட்டுக் கிளை அமர்ந்தே யொரு
காகம் கரைந்திடக் கேட்டதுண்டு
சோலைப் பறவைகள் சோர்வகற்றி வெளிச்
சோதியில் நீந்திடச் சென்றதுண்டு

எட்டுத் திசைவெளி எங்கும்பறந்து உணவு
எப்படியோ தேடி எஞ்சியதைக்
கட்டி அணைத்(து) அல கால்சிற கால்இரு
கால்விர லாலும் எடுத்துவந்து

பட்டுடல் மேனி படபடக் கும்சிறு
பார்ப்புப் பசியாறப் பக்குவமாய்க்
கொட்டி நிறைக்கின்ற கூரலகால் உடல்
கோதி மகிழ்கின்ற கொள்கையினைக்

கண்டு வியக்கின்ற காட்சியுண் டுபல
கற்பனை வல்லமை கற்றதுண்டு
உண்டறி வென்னும் உபாயமுண்டு கிளர்
உள்ளத் துணர்ச்சியின் ஊற்றுமுண்டு

செப்படி வித்தைகள் செய்தபின் னும்கோடி
சென்மம் எடுத்துச் சிறந்த பின்னும்
எப்படி வாழ்வதிங்கு என்பதே மானிடர்க்கு
இன்னும் விளங்காத(து) அதிசயமே;

★

புத்தனேரி ரா. சுப்பிரமணியன்

நாடகம், கவிதை ஆகிய துறைகளில் மிகுந்த ஈடுபாடுடைய எழுத்தாளர். இசைப்பாடல்கள் இயற்றவும் வல்லவர். நாடகமேடை வளர்ச்சியில் பங்கு கொண்டு உழைத்து வருபவர்.

தலைவன் வருகையை எதிர் பார்த்திருக்கும் தலைவி, சூடிக்கொள்ளக் கரத்தில் ஏந்திய மல்லிகைச் சரத்தை தலைவன் வந்து தனக்குச் சூட்டி மகிழ வேண்டுமென்று எண்ணுகிருள். மல்லிகையுடன் பேசவே தொடங்கினுள். இவ்வழகிய கற்பனையில் மலர்ந்த பாடல்.

பூவே, கொஞ்சம் பொறு!

கூந்தலைப் பின்னிப் பட்டுக்
குஞ்சமும் சேர்த்துக் கட்டி
மாந்தளிர் மேனி மங்கை
மலர்முகம் துலக்கி வண்ணச்

சாந்திஞல் பொட்டும் இட்டுத்
தலையிலே சூடும் பூவை
ஏந்திழை கையில் ஏந்தி
எக்களிப் போடு சொல்வாள்.

பூவே கொஞ்சம் பொறுத்திரு!
தாவிஎன்கரும் சடையில் ஏறிடும்
ஆவல்யாவையும் அடக்கிமல்லிகைப்
பூவேகொஞ்சம் பொறுத்திரு

ஆசை அத்தான் வருவார் - உன்
அழகில் மயக்கம் உறுவார்
வாசமெல்லாம் நுகர்வார் - தேன்
வண்டுபோலே மகிழ்வார் - பார் பார்
பூவே கொஞ்சம் பொறுத்திரு

தங்கக் கையால் எடுப்பார் - என்
தலையில் வைத்து முடிப்பார்
பொங்கும் அன்பைக் குடிப்பார் - காதல்
புராணமெல்லாம் படிப்பார் - பார் பார்
பூவே கொஞ்சம் பொறுத்திரு.

" குஹன் "

அகில இந்திய ரேடியோவில் பணிபுரியும் எழுத்தாளர்களில் ஒருவர். பல கவிதைகள் அவ்வப்பொழுது பத்திரிகைகளிலும் ரேடியோ நிகழ்ச்சிகளிலும் வெளிவந்திருக்கின்றன.

இருளின் முறுவலே வானில் பிறையாய் முகிழ்த்து, தலைவியின் நம்பிக்கைக்கு ஒப்புமையாய்த் தோற்றும் கற்பனை இது.

முதல் பிறை

அந்திமகள் தேன் இதழில்
அமுதுண்டு கண்மயங்கிச்
செந்தமிழின் விழி சொக்கிச்
செங்கதிரோன் தான்சோர
அந்தநிலைகண்ட இருள்
அணங்கின் புன்னகையூடே
வந்தசிறு முரல்ஒளி
வரிநிலவாய்த் தோன்றுதிதோ!

கூந்தலினைக் குழையிட்டுக்
 கும்பமுடி இட்டதன்மேல்
ஏந்திழையாள் இணைத்தமலர்
 இழைபோன்றெழில் பெற்று
சாந்தி இருள் சந்நிதியில்
 சதிராக அசைந்துவரும்
காந்திமதிக் கலையொன்று
 காணுதடோ! காணுதடோ!

துன்பக்காரிருள் தேங்கும்
 தூரத்து வான்கடலில்
இன்பச்செதில் கொண்டு
 இழையும் விண்மீன்பிடிக்க
முன்புற்ற ஆசைமகன்
 மூழ்காமல் துணைகாக்க
அன்புநிலாத் தோணியொன்றங்கு
 ஆடுதடோ மேற்றிசையில்

பெண்மனதைக் கொள்ளையிட்டுப்
 பிரிந்தெங்கோ சென்றவனின்
பொன்நினைவுப் பொறியனலின்
 புழுவாகத் துடிக்குமவள்
எண்ணத்தில் இருட்குமைவில்
 எங்கிருந்தோ நம்பிக்கை
மின்கீற்று மிதப்பதுபோல்
 மிளிர்ந்திடுவெண் முதற்பிறைகாண்.

★

விபுலானந்த அடிகள்

தமிழும் வடமொழியும் தேர்ந்த பெரும் பண்டிதர். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தும் ஈழத்தும் பேராசிரியராக விளங்கிய பெரியார். இவருடைய "யாழ்நூல்" இசை உலகில் ஈடு இணையற்ற மாணிக்கம். அவரது கவித்வ மேதைக்கு ஒருசான்று இந்தப் பாடல்.

ஈசன் உவக்கும் மலர்

வெள்ளை நிறமல்லிகையோ
    வேறெந்த மாமலரோ
வள்ளல் அடி இணைக்கு
    வாய்த்த மலர் எதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல
    வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலம் அடி
    உத்தமனுர் வேண்டுவது !

காப்பு அவிழ்ந்த தாமரையோ
கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிளையாய் வந்தவர்க்கு
வாய்த்த மலரெதுவோ
காப்பு அவிழ்ந்த மலருமல்ல
கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தள் அடி !
கோமகனார் வேண்டுவது.

பாட்டளிசேர் பொற்கொன்றையோ
பாரிலில்லாக் கற்பகமோ
வாட்டம் உறாதவர்க்கு
வாய்த்த மலர் எதுவோ
பாட்டளிசேர் கொன்றையல்ல
பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவழி நெய்தல்அடி
நாயகனார் வேண்டுவது.

★

வி. ஜி. ஸ்ரீநிவாசன்

பாரதியார் சிறிதுகாலம் பணியாற்றிய மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக இருந்து வருபவர். பரிதிமாற் கலைஞர் (வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்) பெண்வழிப்பேரர். பாரதி இலக்கியங்களில் தேர்ச்சியுள்ளவர். பெண்மையின் வெள்ளை உள்ளத்தின் முன் வெண்டாமரை நாணிச் சிவந்த செந்தாமரை ஆயிற்று என்ற சேதியைக் கூறும் கவிதை.

சிவந்த தாமரை

அன்றோர் கயத்தில் ஆடிய தாமரை
அதன் நிறம் வெண்மை
ஆம் அயன் படைப்பு.

பொன்மயில் இன்பப் பூவை ஒருத்தி
அன்பெனும் அரங்கில் ஆடிக் களித்து
தாவிப் பறித்து வெண்தாமரை மலரை
இதயம் சேர்த்து இன்புற நின்றாள்.

துள்ளிய இதயத் தூவெண் மலரால்
நன்னிற மலரும் நாணிச் சிவந்து
தன்னிறம் மாறித் தனித்திரு வாழும்
செந்தாமரையாய்ச் சிறப்படைந்ததுவே!

✶

என். ராகவன்

அகில இந்திய ரேடியோ திருச்சி நிலையத்தில் எழுத்தாளர். நாங்குநேரியில் பிறந்தவர். சிறு கதைகள், கட்டுரைகள், நாடகங்கள் பல எழுதி யுள்ளார். இவரது பாடல் ஒன்று.

எங்கள் மலை

வண்டினங்கள் வெண்கமலச்
சங்கொலியை முழக்கும்
வனவேடர் தாரையென்று
மான்கள் உயிர் இழக்கும்
கொண்டல் இனம் தவழ்ந்துசுனை
அண்டை வந்து தோயும்
குஞ்சரங்கள் ஓடுவதாய்ச்
சிங்கம் புலி பாயும்

கண்டெடுத்த தேனடையால்
பெண்குரங்கை ஊட்டும்
கடுவனையோர் கரடி கண்டு
நெடும் பல்லைக் காட்டும்
தெண்டிரைகள் தென்றலேறி
அண்டமெல்லாம் தெறிக்கும்
தேனருவி மலைச்சாரல்
தேசம் எனதம்மே!

★

தே. ப. பெருமாள்

திரு. தே. ப. பெருமாள் நாஞ்சில் நாட்டுக் கவிஞர். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் மாணவர். அவரது வாழ்த்தையும் அன்பையும் பெற்று வளர்ந்தவர். கவிதைகளும், சிறு கதைகளும், நாடகங்களும் பல எழுதித் தமிழன்னைக்குத் தொண்டாற்றி வருகிறார். வீரகேசரியிலே 'கவிக்குயில்' எனும் புனை பெயருடன் வாரந்தோறும் அவரது கட்டுரைகள் வெளிவருகின்றன. பல இலக்கிய நூல்கள் வெளிவரச் சிறந்த ஒத்துழைப்பும் செய்து வருகிறார். அவரது இசைக் குமரியை இங்கே காணலாம்.

இசைக்குமரி

காலையிலே விரிபூவில் கசியும் தேனுள்
களிவண்டின் பண்ணொலியில் கலந்து நின்றாள் ;
சோலையிலே காதல்மது சுவைக்க நல்கித்
துடிப்பேற்றும் பூங்குயிலின் தொண்டை யானாள் ;

மாலையிலே மல்லிகைப்பின் மலர்ச்சி கண்டு,
வருடுமிளந் தென்றலுடன் மருவிச் செல்வாள் ;
கோலஞ்சேர் கருமுகிலில் குதித்துத் தாவிக்
கும்மாளம் கொட்டிடுவாள் இசையாம் தேனி ;

திரைக்கரத்தால் முத்துகளைத் தினமும் வீசிச்
சேவிக்கும் கடலோடு சிரித்து நிற்பாள் ;
கரவாத வளம்பாய்ச்சிக் கருணை சிந்தும்
கன்னிநதி தோளணைத்துக் களிகள் கொள்வாள்
உரையாடுந் தேனருவி உயிரில் கூடி
உருவேற்றும் பாடமதி லொன்றி நிற்பாள் ;
சுரந்துவரும் பெருமழையின் தொனியில், வாளித்
தொட்டிலிலே குதிதேரை சுரம்நிற் பாளே :

மயிலினது நல்லகவல் ; மந்திப் பேச்சு ;
மரமிடையே கிளிசெப்பும் மழலைச் செல்வம் ;
புயல் சுரப்பாய் பாலளிக்கும் புனித ஆக்கள்,
பொன்கன்றைத் தேடுகின்ற அன்ப ழைப்பு ;
வெயிலொதுங்கும் ஆயர்குலச் சிறுவர் காற்றில்
விடுகின்ற தெம்மாங்கு, காலைச் சேவல்
உயரொலியும் இசைக்குமரி உள்ளம் பொங்கி
உருவாக்கும் தேனன்றோ : நடன மன்றோ ;

சிறுமதலை நடக்குங்கால் கேட்கும் சப்தம் ;
செப்புகின்ற தேன்மழலை, சிறுகைப் பாணி ;
உறுப்பழகு மிஞ்சவரும் வனிதை நல்லாள்
உதிர்க்கின்ற அமுதமொழி : உருக்கும் கீதம்
பொறுப்புடைய நடைநல்கும் சிலம்பி ஞர்ப்பு ;
பொன்மேனி யசையவிரல் மீட்டும் வீணை ;
சிறப்புடைய கருவிகளின் நாதமெல்லாம்
சிங்காரி இசைவாணி சேர்க்கை யன்றோ ?

மின்னெறிந்து, சுடர்வீசி, மேலும் கீழும்
மிதக்கின்ற வானப்புள் மீட்டும் கீதம்;
சின்னவொரு வேய்ங்குழலின் துவார மூடு
செல்கின்ற காற்றெழுந்து செய்யும் வேலை;
அன்னைமார் தாலாட்டும் ஆர்வம் பாட்டோ
உழுகின்ற ஒப்பாரி. அரவம் தன்னில்,
கன்னிமார் நாற்றுநடும் களைப்பில், பேச்சில்
கால்வைத்தாள் இசைக்குமரி; கலந்து நின்றுள்:

அமுதத்தின் சுவைதந்து, அறிவு நல்கி
அகிலத்தார் கண்டுதொழும் ஆண்மை யீந்த
எமதன்னை, தமிழரசி இதயம் காட்டும்
இன்றமிழ்ச் சொல் கவிவாணர் இயற்றும் பாட்டில்,
குமைகின்ற வாழ்வுதனில், குதூகலத்தைக்
கொட்டுகின்ற நாட்டியத்தில், கூத்து தன்னில்
அமைந்துநின்றுள் கதிரொளியில் சூடு போல;
ஆர்த்திட்டாள் நாதத்தாய்: வாழ்வு கண்டாள்:

நெஞ்சத்தில் பெருங்கவலை நிறையும் போதும்,
நினைவென்னும் நெருப்பெய்தி நீற்றும் போதும்,
வஞ்சத்தார் செய்கையினில் மயங்கும் போதும்,
வாழ்வினிலே பேரிடர்கள் வருத்தும் போதும்,
மிஞ்சுகின்ற கல்நெஞ்ச வெறியின் போதும்,
மேதினியைத் துறப்பதற்கு விரையும் போதும்,
தஞ்சத்தைத் தந்தெம்மைக் காக்கும் தாயே:
சரணடைந்தேன்; என்னுயிரில் தங்கி வாழ்க!

★

"பாசொலி"

"பாசொலி" தென் திருவிதாங்கூரைச் சேர்ந்தவர். குழந்தைகளுக்காய்ப் பல பாடல்கள் எழுதியுள்ளார். தமிழகத்துப் பிள்ளைகள் நாவிலே அவர் பாடல்கள் தவழ்கின்றன. தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மூன்று மொழிகளிலும் பயிற்சி அவருக்கு உண்டு. ஆங்கிலக் கவிதைகளையும் உரை நடை நூல்களையும் தமிழில் தந்து பணியாற்றி வருகிறார். அவர் படைத்த குழந்தை இங்கு தவழக் காண்கிறோம்.

குழந்தை

சின்னஞ் சிறிய குழந்தையவள்
    செதுக்கிவைத்த சிலைபோல்வாள்
கன்னங் குழிய சிரித்தெங்கள்
    கவலை போக்கும் குழந்தையவள்

மெல்லென ஊர்ந்து வந்திடுவாள்
மேலே வீழ்ந்து புரண்டிடுவாள்
பல்லினைக் காட்டிப் புன்சிரிப்பால்
பரவசம் அடையச் செய்திடுவாள்.

தந்தம் போன்ற கைகால்கள்
தாமரைபோன்ற முகமுடையாள்
சிந்தை கவரும் விழிகளுடன்
சிரித்துச் சிரித்து ஓடிடுவாள்

கொஞ்சும் மழலை மொழிகளிலே
கொள்ளை போகும் உள்ளமெலாம்
நஞ்சும் அமுதாய் மாற்றிடுவாள்
நளின மலர்க்கை விரலாலே

பார்க்கப் பார்க்க இன்பமவள்
பசியும் மறந்து வாழ்ந்திடலாம்
ஆர்க்கும் குழந்தை அரியசெல்வம்
அதனைப் பெற்றோர் வாழியவே !

★

கோவை. சி. ஏ. அய்யாமுத்து

கோவை சி. ஏ. அய்யாமுத்து நாடறிந்த எழுத்தாளர், கவிஞர், தேசத்தொண்டர். 1923-ல் கோவையிலிருந்து வெளிவந்த தமிழ் ஆங்கில இரு மொழிப் பத்திரிகையின் தமிழ்ப்பகுதி ஆசிரியராக இருந்தவர். இவரது 'குடி நூல்' கதர் இயக்கத்திற்காக சிறந்த சேவை புரிந்துள்ளது. 'தேய்ந்த லாடம்' என்ற கவிதைத் தொகுப்பின் ஆசிரியர். 'தங்கை' என்ற இந்தப் பாடல், செல்வம் வந்து வலிய அணைத்துத் தரும் சுகத்தை நகைச் சுவையுடன் எடுத்துக் காட்டுகிறது.

தங்கை

மெத்தப் படித்த மேதை ஆம் கிழவர்
சொத்தும் சுகமும் துறந்தோர் ஆகி
அக்கம் பக்கம் இரந்தே உண்டு
அமைதி எய்தி தியானத் திருந்தார்.
அங்கோர் நாளில் தங்கையும் வந்தாள்
அருகினில் அமர்ந்தே திருமுகம் மலர்ந்து
''அண்ணு வருவீர்'' வாவென் றழைத்தாள்.
''தாயே குடும்பிடு தயாபரி போய்வா
செல்வரின் இல்லம் தேடிச் செல்வாய்
பகட்டும் பதவியும் பகையெனக் கண்ட

பாவியை நீயேன் பாவித் தழைத்தாய்''
என்ருர் பெரியார். இளையாள் நகைத்தே
''வேண்டாம் என்ருல் விடுபவள் நானே
என்ருள் அவளும். எடுத்தார் கிழவர்
உண்ணுங் கலத்தை; ஓங்கி எறிந்தார்.
பார்த்தார் பெரியார் பயந்தே போனுர்
மனிதரே இல்லா மாமலை சென்ருல்
தொல்லையிராது என்றே கருதிச்
சென்ருர் தெருவில்—ஜெயஜெயகோஷம்
வானைப் பிளந்தது வந்தது கூட்டம்
எத்தனை சனங்கள்; எள்விழ இடமிலை
மன்னர் பிறந்த மாநாள் கூட்டம்—
சாலையின் ஓர்புறம் மூலையில் நின்ருர்
மின்னும் ரதத்தில் வந்த மன்னவன்
கண்ணினில் பட்டார் கந்தைக் கிழவர்
அரை நொடிப்போது ஆனதோ என்னவோ
அரண்மனைச் சேவகர் அணுகினர் கிழவரை
இருகை கூப்பி ''இறைவா போற்றி!
வருகை புரிந்து வாழ்த்துவீர் என்றே
எங்கள் கோமான் ஏவினன் எம்மை
பல்லக் கேறிப் பரிவுடன் வாரீர்!!''
என்றே இயம்பினர் இங்கிதத் தோடே
தப்பித் தோடத் திரும்பினுர் கிழவர்—
தங்கையு மாங்கே தோன்றிச் சிரிக்க—
ஓங்கிக் கையால் ஓரடி கொடுத்தார்
தங்கை விலகத் தாவிப் பறந்தார்
பல்லக் கவர்முன் பாய்ந்து மறிக்க
கயிற்ருல் அவரைக் கட்டிச் சேர்த்துத்
தூக்கிச் சென்றனர் ஆத்திரத்தோடே,
பன்னீர்த் தொட்டியில் பிடித்துத் தள்ளி
பலவகைச் சாந்து பூசினர் உடலில்
பட்டில் ஆடை பலவிதத் துடுத்தி
பரிமளம் வீசப் பரிசனம் சூழ

வேந்தன் சபைக்கே விரட்டிச் சேர்த்தனர்
பொன் ஆசனத்தில் புரவலன் இருந்தான்
கிழவரைக் கண்டதும் கீழே இறங்கி
மண்டியிட்டவரை வணங்கித் துதித்தான்
தங்கையும் ஆங்கே தனிமையில் தோன்றிக்
கிழவர் காணக் குலுங்க நகைத்தாள்
எல்லையில் கோபம் எழுந்தது அவருள்
உதைத்தார் கோவை உருண்டது மகுடம்
ஆவென்று அலறி அங்குளோர் யாவரும்
உறைவாள் உருவி ஓடிமுன் செல்ல
''என் தலை சாயும்'' என்றே கிழவர்
எண்ணுமுன் ஆங்கே என்னவோர் அதிசயம்
மன்னனுங் காண மகுடத் திருந்தே
பன்னக மொன்று படமெடுத் தாட
கிழவரை வீழ்த்தக் கிளம்பிய வாட்கள்
அரவினைக் கொல்லும் அரும் பணியாற்றின;
எம்முயிர் காத்த இறைவ நீ என்றே
வேந்தனுங் கிழவனை வழுத்தினன் என்னே!
தங்கை வந்திடில் தங்கிடா வறுமை
அங்கை பட்டமண் அரும் பொன் ஆகும்
என்றே இக்கதை இயம்பினர் ஒருவர்
மற்றவர் கேட்டு மகிழ்வுறு மாறே
செப்பினம் நாமும் செய பாரதத்தில்
ஒப்பிலாக் காந்தி ஒருவர் தவத்தால்
இளையாள் தோன்றத் தளைகள் அறுந்தே
எத்தனை மேன்மை எய்தினம் நாமே!

★

" சங்கர் "

இளங்கவிஞர்களில் ஒருவரான சங்கரமூர்த்தி சிறந்த சிறுகதை ஆசிரியருமாவார். இனம் விளங்காத இன்பத்தைத் தேடி தவம் இருக்கின்ற இளம் இதயம் நின்று வழிபார்த்து இருப்பதும் ஒரு நெட்டுயிர்ப்பில் யுகம் முழுவதும் காத்திருப்பதும் சுவைபட சித்திரிக்கப்படுகிறது.

தரிசனம்

இதயக் கோயில் வெளியினிலே—படர்
இருட்டு நிழலின் ஒளியினிலே
உதயம் தொடுத்து மாலைவரை—நான்
உன்னைக் காணும் காரணமேன்?
நெஞ்சில் பதியம் போட்டதனால்—என்
நினைவை நீராய் வார்த்ததனால்
வஞ்சிக்கொடியே என்றதனால்—உன்
வாசல் முழுதும் படர்ந்திட்டேன்.
இருளில் ஒளியைக் கண்டாச்சு—தேடி
எங்கோ இதயம் தொலைச்சாச்சு
மருளில் வாழ்வு வாழ்ந்தாச்சு—பின்
மறைந்து 'நான்' போய்.'நீ' யாச்சு!
சென்று தொலைந்ததைத் தேடவிலை—எனைத்
தேடியோ யாரும் வரவுமிலை
நின்று வழியினைப் பார்த்திருந்தேன்—ஒரு
நெட்டுயிர்ப்பில் யுகம் காத்திருந்தேன்.

★

கே. வி. பாஷ்யம்

இளங்கவிஞர் கே. வி. பாஷ்யம். பாரதிக்கு இந்த இளங் கவியுள்ளம் செலுத்தும் காணிக்கையே கவித்தேவன் வாழ்த்து.

கவித்தேவன் வாழ்த்து

பட்டொளி மாமதிப் பெருநிலவே !—எங்கள்
பாரதித் தீங்கவி கேட்டிருப்பாய் !—அதில்
சொட்டிடும் இன்பம்போல் சுவையுளதோ !—அல்லி
சொரிந்திடும் முத்தத்தின் போதையிலே !
கர்ச்சனை செய்திடும் ஆழ்கடலே !—தமிழ்க்
கவிஞனின் கர்ச்சனை கேட்டிருப்பாய் !—அவன்
விற்பனக் காவிய விந்தைகள் வேறெங்கும்
மேவிடக் கேட்டுக் கிளர்ந்ததுண்டோ ?
நாட்டிய மாடிடும் மாமயிலே !—கவிப்
பாரதிப் பண்ணினைப் பதம்பிடிப்பாய் !—சுவை
கூட்டிய பாலுடன் தேன் அளைந்தே உளம்
கொஞ்சிடச் செய்திடும் போதையிலே
காதற் கதைபேசுங் கிள்ளைகளே !—மீசைக்
காளைக் கவிஞனைப் போற்றிடுவீர் !—அலை
மோதி யழித்திட்ட அன்னை தமிழினைக்
காத்திட்ட மாகவி அண்ணலென்பீர் !
அன்ன நடைபயில் பூவையரே !—உங்கள்
அன்பினையே மிகக்கொட்டிடுவீர் !—புது
வன்ன மலர்கொடு தூவிடுவீர் !—கவி
வாரி இவனென வாழ்த்திடுவீர் !

★

" சுரதா "

உவமைகளிலும் சொல்லாட்சியிலும் புதிய வழிகளைக் கையாளும் இவரது இயற்பெயர் இராச கோபாலன். தஞ்சை மாவட்டத்து சிக்கல் நகரை யடுத்த பழையனூர்க்காரர் இவர். இதோ இவரது ஒரு பாடல்.

தென்னாட்டின் சித்திரை

தென்னாட்டின் சித்திரையே ! தமிழ்நூல் தந்த,
தேனெழுத்தின் உச்சரிப்பே ! நடுங்கவைக்கும்,
பின் பனிக்குப் பின்பிறந்த புதிய ஆண்டே !
பேருணர்ச்சி தருகின்ற வெயிலே ! இங்கு,
உன்னாலே புத்திளமை காண்போம். உன்றன்
உத்தரவை. மரத்திலுள்ள இலைகள் கேட்கும்
பொன்னாளே ! புகழ்பெருக்கிக் கொள்ளும் நாளே !
புதுமைதரும் இளவேனிற் பருவ நாளே !

இத்தரையைச் சூடாக்கப் போகும் உன்னை,
'இளவேனில்' என்கின்றார். ஆனால், யானோ !
வித்தினிலே நீபிறந்து வந்தாய்; மாந்தர்
விரும்புகின்ற 'மாதுளையே'! என்றழைப்பேன்
முத்தைப் போல் அழகாகத் திரண்டிருக்கும்
முட்டையிலே நீ முகிழ்த்தாய்—'கிளியே' என்பேன்
சித்திரைஎன் றழைக்கின்றார்; உன்னை, ஆனால்
தெரியவில்லை எனக்கு இதன் பொருள் விளக்கம்

வாய்க்காலின் தண்ணீரில், வயல்கூட் டத்தின்
வரலாறும், செங்நெல்லின் கதையும் உண்டு.
தேய்க்கின்ற சந்தனத்தில், தென்றல் காற்றின்
சிறுகதையும் தென்மலையின் குறிப்பும் உண்டு.
தாய்ப்பாலில், குடும்பத்தின் கதையும், நாட்டின்
சரித்திரமும் இருப்பதுண்டு; உனது வாழ்வில்,
ஓய்வின்றி உழைக்கின்ற செயலும், தெற்கு
உலகத்தின் பழங்காலக் கவிதை உண்டு.

புத்தாண்டே நீவருக, வாழ்க; சோலைப்
பூங்குயிலைப் பாடவைக்கும் வெயிலே வாழ்க!
சித்திரையே நீவளர்க, வாழ்க, ஆதிச்
செந்தமிழர் வகுத்தபெரும் பொழுதே வாழ்க.
நித்திரையை இனிப்பாக்கிக் கொள்வ தற்கு,
நிலவுதனை அனுப்பிவைக்கும் நெருப்பே வாழ்க!
கத்துகடல் முத்தெடுக்கும் தமிழ்நாட்டார்க்குக்
கல்யாணத் தேதிதரும் கனலே வாழ்க!

★

தமிழன்னையின்
பாதமலர்களில் சமர்ப்பிக்கப்
படும் கவிமலர்கள்

பாரதிக்குப் பின் பாரதியைப் போல ஒரு கவிஞன் தோன்ரு விட்டாலும், பாரதி வழியில் பாமணம் பரப்பும் கவிஞர் பலரை நாம் காணுகின்ரேம். இத் தொகுப்பில் பாரதிக்குப் பின் தோன்றிய 55 கவிஞர்களின் அழகிய கவிதைகள் இடம் பெற்றுள்ளன. கவிதைத்துறையில் சமீப காலமாக நடைபெற்றுள்ள சாதனைகளை ஓரளவேனும் அறிய உதவும் இத்தொகுப்பு நூல்.

தென்மொழிகளின் புத்தக டிரஸ்ட்
ஆதரவில் பதிப்பிக்கப்பெற்றது

GNANODAYA PRESS, MADRAS-1